ரூ. 8.00

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2044 தை
சனவரி 2013



சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி

மக்கள் சிந்தனை

குன்றக்குடி – 630 206

சிவகங்கை மாவட்டம்

தொலைபேசி எண் : 04577 – 264227

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2044	மாதம் : தை
மலர் : 28	இதழ் : 1

உலகத்தின் ஞானச்சுடர் ஒளி

ஆன்மிக உலகத்தின் எழுஞாயிறு சுவாமி விவேகானந்தர். இந்தியாவின் ஆன்மிகத்தை உலகஅரங்கில் உயர்த்திப்பிடித்த பெருமை அவருக்கு! ஏழை எளிய சாமான்ய மக்களைப்பற்றியே சர்வசதா காலமும் சிந்தித்த மாமுனிவர்! சுவாமி விவேகானந்தர் மண் உலகில் கால்பதித்த காலம் குறைவு! ஆற்றிய பணிகள் காலவெள்ளத்தில் கரையாது நின்று நிலைத்து நிற்பவை! எல்லையற்று விரிந்து பரந்த ஞானம்! ஆன்மிகத்தினை மனித குல மேம்பாட்டிற்காகச் சிந்தித்த விரிந்து பரந்த அகன்ற மனிதநேயப்பார்வை! தாழ்ந்த நிலையில் உள்ள நம் மக்களை உயர்த்துவதற்கான ஒரேவழி, தேசத்தை உயர்த்துவதற்கான ஒரேவழி கல்வி! கல்வி! கல்வி ஒன்றுதான்! என்று சுவாமி விவேகானந்தர் முழங்கினார்.

உழைக்கும் வர்க்கத்தினருக்குக் கல்வி வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்! ஏழைகள் தங்கள் வீட்டு வாசலில் கல்வி பெற வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்! மைசூர் மன்னர் தம் மாநிலத்தில் கல்வியை இலவசமாக்கப் போவதாக அறிவித்தபோது படித்த வீட்டுக் குழந்தைக்கு ஒரு ஆசிரியர் வேண்டுமானால் பாமர வீட்டுக்குழந்தைக்கு ஐந்து ஆசிரியர்கள் அளிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார். கல்வி என்பது தகவல்களின் தொகுப்பு அல்ல. மனிதனை உருவாக்குகின்ற வாழ்க்கைக்கு வேகம் கொடுக்கின்ற பண்பு நலன்களை உருவாக்குகின்ற கருத்துக்களைச்

செயல்படுத்துவதே கல்வி! தன்னம்பிக்கையை ஊட்டுவதோடு இந்தியப் பாரம்பரியங்களில் இருந்தும் இலட்சியங்களில் இருந்தும் விலகாத அதே வேளையில் மேலைநாட்டுத் திறமைகளை இணைத்துக் கொண்டஒரு கல்வி முறையே இந்தியாவிற்குத் தேவை என்று முழங்கினார்.

நாடு முழுவதிலும் ஆன்மிகச்சிந்தனையை நிறையுங்கள் என்று முழங்கினார் விவேகானந்தர். உண்மை, அன்பு, நீதி, அமைதி, சமரசம் போன்ற பண்புகள் நம் மக்களின் இதய ஆழத்தில் எப்பொழுதும் ஜீவித்துக் கொண்டிருப்பதால் இந்தியர்கள் இயல்பாக வன்முறையற்ற அமைதி அன்பு வழியை விரும்புகின்றார்கள்!

வாழு! வாழ விடு என்பது தான் இந்தியாவில் செயல்முறையாக இருந்துள்ளது. வேற்றுமையில் ஒற்றுமை என்ற தத்துவத்தை இந்தியா நம்பி வந்துள்ளது. அதை சுவாமி விவேகானந்தர் வரவேற்றார். அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். உழைக்கும் அடித்தட்டு மக்களிடம் அதிகாரம் சென்று சேர வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் வலியுறுத்தினார்.

சுவாமி விவேகானந்தர் மக்களுக்குத் தொழில் வளம் வேண்டும் என்பதற்காகத் தொழில் அதிபர்களையும் நாடினார். மேலை நாடுகளுக்குக் கப்பலில் பயணம் செய்த போது அதே கப்பலில் ஜே. என். டாட்டாவும் பயணம் செய்தார். தொழில் சம்பந்தமாக உயர் ஆராய்ச்சிகள் செய்வதற்காக ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும் என்று டாட்டாவுக்கு ஆலோசனை வழங்கினார் விவேகானந்தர். டாட்டா விவேகானந்தரின் அறிவுரையை ஏற்றுக்கொண்டார். அவர் கூறியது போன்ற ஆராய்ச்சி நிறுவனங்களை நிறுவவும் செய்தார். அந்த நிறுவனம் இன்று உலகப்புகழ்பெற்று விளங்குகின்றது. நாட்டின் தொழில் வளம் பெருக வேண்டும் என்பதில் சுவாமி விவேகானந்தருக்குத் தொலைநோக்குப் பார்வையும் அதீத அக்கறையும் இருந்தது. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு ஆன்மிகமும் - அறிவியலும் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்று சுவாமி விவேகானந்தர் எண்ணினார்.

சுவாமி விவேகானந்தர் உலக அரங்கில் இந்திய மண்ணின் ஆன்மிகத்தை உயர்த்திப்பிடித்துப் புதிய வரலாறு படைத்தார். இந்தச் சாதாரண துறவி என்ன பேசப்போகின்றார் என்று அரங்கமே அலட்சியமாய் இருந்த பொழுது "எனதருமை அமெரிக்க சகோதர சகோதரிகளே!" என்று தொடங்கிய உரையின் முழக்கம் உலக மக்கள் அனைவர் இதயத்தையும் தொட்டது.

தூய்மையில் இருந்தும் மௌனத்தில் இருந்தும் ஆற்றல் வாய்ந்த சொற்கள் பிறக்கின்றன என்ற சுவாமிஜி, "அமெரிக்க சகோதரிகளே, சகோதரர்களே! பிற மதக் கொள்கைகளை வெறுக்காமல் மதித்தல், அவற்றை எவ்வித எதிர்ப்பும் இன்றி ஏற்றுக்கொள்ளுதல் என்ற இரு மேலான பண்புகளை உலகுக்குப் போதித்த சமயத்தைச் சார்ந்தவன் நான், உலகின் அனைத்து நாடுகளாலும் மதங்களாலும் கொடுமைக்குள்ளாகி விரட்டியடிக்கப் பட்டவர்களுக்குப் புகலிடம் தந்த பெருமைக்குரிய நாட்டைச்சார்ந்தவன் நான்! இந்தப்பேரவை தொடங்கிய போது முழங்கிய மணியோசை, மதவெறிக்கும், ஒரே குறிக்கோள் இல்லாமல் பல்வேறு வழிகளில் பயணிக்கும் மக்கள் மனங்களில் நிலவும் இரக்கமற்ற உணர்ச்சிகளுக்கும் சாவு மணியாக மாறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்" என்று உரையை நிறைவு செய்தார். ஆன்மிக மாளிகையின் சாளரத்தின் வழியே மனித நேய நல்லிணக்கக் காற்று வீசத் தொடங்கியது . உண்மையான மனித குல நேயம்மிக்க ஆன்மிகத்தின் உயிர்த்துடிப்பு. உலகு எல்லாம் பரவும் நிலை ஏற்பட்டது.

சுவாமி விவேகானந்தர் தாம் நாற்பது வயதுக்கு முன்பு பரிபூரணம் அடையப்போவதை (சமாதி நிலையை) முன்கூட்டியே அறிந்திருந்தார். அவர் சிந்தித்தவாறு அவர் தம் சமாதி நிலையை, மெய்ஞ்ஞான நிலையை அடைந்தார். மண்ணில் கால் பதித்த மனிதப்புனித வாழ்வு 40 ஆண்டுகளுக்கும் குறைவு. ஆற்றிய அரும் பெரும் சாதனைகள் விண்ணும் மண்ணும் காற்றும் கடலும் உள்ளளவும் மறக்க இயலாதவை. மறுதலிக்க முடியாதவை.

சுவாமி விவேகானந்தர் கடுந்தவம் புரிந்த குமரி மண்ணில் 1982ஆம் ஆண்டு மதங்களின் பெயரால் ரத்தம் சிந்தப்பட்டு மண்டைக்காடு மதக்கலவரம் உச்சக்கட்டத்தில் பல மனிதப்

படுகொலைகள் நிகழ்ந்தன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன! அந்நேரத்தில் இழப்பதற்கு என்ன இருக்கின்றது இருக்கின்ற உயிரைத் தவிர! என்று உயிரைப்பணயம் வைத்து நம் மகாசன்னிதானம் கலவரங்களைத் தடுத்து ஆற்றிய நல் இணக்க வேள்வி சாதி, சமய அடையாளங்களுக்கு அப்பால் மரபுகளின் எல்லைகளைத் தாண்டி மனிதத்தைக் காப்பாற்ற நடத்திய அர்ப்பணிப்பு வேள்வி.

குமரி மாவட்டத்தில் மதக்கலவரங்களைத் தடுத்து நல்வாழ்வு நல் இணக்கப்பணியில் ஈடுபடும் பொழுது ஒரு கட்டத்தில் ஒரு பிரிவினர் கடலில் மீன் பிடித்துவருவதை , மற்றொரு சாரார் வாங்க மறுத்த பொழுது தம் வாழ்வில் ஒரு நாள்கூடத் தொடப்பெறாத மீனைக் கையில் பிடித்துக் கூவி ஏலம் போட்ட போது வாங்க மறுத்து புறக்கணிப்பு செய்தவர்கள் கண்ணில் நீர் மல்க ஓடோடி வந்து மீனை வாங்கினர். பிரிவினை வயப்பட்ட இரு பிரிவினரும் ஒருவரையொருவர் கட்டித்தழுவி அன்புடன் அணைத்துக் கொண்டனர். இன்றும் குமரிமாவட்டக் கடலோரம் வசிக்கும் மக்கள் நம் குருமகாசந்நிதானத்தை "சமாதானசாமி" என்றே கூறிப் போற்றி வருகின்றனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

நம் குருமகாசன்னிதானம் அப்பரடிகளின் அடிச்சுவட்டில் தமிழகம் முழுவதும் உழவாரப்பணிகள், திருக்குளங்கள் பேணுதல், மரங்கள் நடுதல், நந்த வனங்கள் உருவாக்குதல், பழப்பண்ணைகள் அமைத்தல் , சாதி வேறுபாடற்ற சமூகம் உருவாக்கப் பாடுபடுதல் ஆகிய பணிகளை இடைவிடாது நிகழ்த்தினார்கள்!

சுவாமி விவேகானந்தரின் சிந்தனை வழியில் தமிழகம் முழுவதும் கல்விப்பணிகள், தீண்டாமை விலக்குப் பணிகள், சமய நல்இணக்கப்பணிகள், ஏழை எளிய மக்களின் பொருளாதார வாழ்வு முன்னேற தொழில் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை இடைவிடாது செய்தார்கள்!

சுவாமி விவேகானந்தரின் கனவாகிய புதிய பாரதத்தை உருவாக்க அல்லும் பகலும் அயராது உழைத்தார்.

"எழுமின்! விழிமின்! குறிக்கோளை அடையும் வரை, விடாது உழைமின்" என்று சுவாமி விவேகானந்தர் அடையாளம் காட்டிய

இலட்சிய இலக்கு, நாம் அடைய வேண்டிய இலட்சியப் பயணத்தின் குறிக்கோள் ஆகுக!

மண்பயனுற வேண்டும்!
வானகம் இங்குத் தென்பட வேண்டும்!
கவலை துறந்து இங்கு வழ்வதே வீடு!

என்று, மண்ணை விண்ணகமாக்குவோம்.

மனித உள்ளங்களை அன்புமயமாக்க குமரிமுனையில் ஏற்றிய ஞானச்சுடர் ஒளி, உலகம் முழுவதும் சுடர்விட்டுப் பிரகாசித்து வழிகாட்டுகிறது. அந்த ஞான ஒளியின் வழியில் நம் பயணம் தொடரட்டும்.

என்றும் வேண்டும் இன்ப அன்புடன்,

"கொழுத்த முதலாளித்துவம், கெட்டித்தன்மை வாய்ந்த மதபீடங்கள் - இவற்றுக்கு பிழைப்புக் காரணமாகத் துணை போகிய அராஜகத் தன்மை ஆகியவற்றால் இந்த உலகம் அல்லற்படுகிறது; அழிவை நோக்கிச் செல்கிறது! அழிவை நோக்கிச் செல்லும் இந்த உலகத்தைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

ஆம்! இது உடனடியாகச் செய்ய வேண்டிய பணி! கல்லறைக்குப் போகவேண்டிய பழமை, மூர்க்கத்தனமாக எதிர்க்கும்! உன்னைக் கொல்லலாம்! அஞ்சற்க! துணிவோடு நில்! கடந்தகால வரலாற்றைக் கூர்ந்து கவனித்துப் பார்!

எதிரப்புகளைச் சந்தித்து உயிர் துறந்தவர்களே வெற்றி பெற்றுள்ளனர். அவர்களே இன்றும் வாழ்கின்றனர்.

உயிர்ப்புள்ளோர், உயிர்ப்புடன் வாழ்வை இயக்குவோர் எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சார்! உயிர்ப்புள்ள மனிதனுக்கு ஊக்கம் அதிகம்! ஆதலால் உயிர்ப்புடன் வாழ்!" - இதுவே விவேகானந்தர் அறிவுரை.

- அருள்நெறித்தந்தை

அவரே ஒரு பாடம்!

(தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

மதுரை யாதவர் கல்லூரி வேதியியல் துறைத்தலைவர் பேராசிரியர் சேதுராமன் 14.01.2013 தைத்திங்கள் முதல்நாள் மறைந்து நம் நெஞ்சில் நிறைந்துவிட்டார்கள்.

யாதவர் கல்லூரி சிறந்த, உயர்ந்த பேராசிரியர்களைக் கொண்ட அறிவுக் கோயில். உலகம் அறிந்த பேராசிரியர்களும் உண்டு. தமிழகத்தின் சட்டமன்ற நாயகராக, அறநிலையத்துறை மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சராக இருந்த, யாதவர் கல்லூரி முன்னாள் முதல்வர் பேராசிரியர் முனைவர்.மு. தமிழ்க்குடிமகன், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் துணைவேந்தராக இருந்த பேராசிரியர், முனைவர் க. திருவாசகம், தமிழ்ப் பேராசிரியர் சொக்கலிங்கம், இப்படிப்பட்ட புகழ்மிக்க பேராசிரியர்களைக் கொண்ட கல்லூரி. மிகவும் பிற்பட்ட, பின்தங்கிய கிராமப்புறங்களில் இருந்த அடித்தட்டு ஏழை, எளிய குடும்பங்களில், வறுமை ஏழ்மை என்ற தடைகளை எல்லாம் தாண்டிப் படித்த, முதல் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் பேராசிரியர்களாக இருப்பதால், மாணவர்கள் மீது தனிவாஞ்சையும், மாணவர்களின் கல்வி வளர்ச்சி மீது அதீத அக்கறை உடையவர்களாகவும் விளங்கினார்கள்.

வேதியியல் துறையின் முன்னாள் தலைவராகவும், முன்னாள் முதல்வராகவும் விளங்கிய பேராசிரியர் ரெங்கன், முன்னாள் கணிதத் துறைத் தலைவர், பேராசிரியர் கண்ணன் ஆகியோர் கல்லூரியின் மீதும், மாணவர்களின் மீதும் மாறாத அன்பு கொண்டவர்கள். அந்தப் பேராசிரியர்களுள் வேதியியல்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சேதுராமன் கற்பித்தலை அருந்தவமாக நிகழ்த்தியவர். எல்லா மாணவர்களும் நன்கு படிக்க வேண்டும் என்பதைக் கடுமையாகவே வலியுறுத்துவார். பலாப்பழத்தின் தோல் முள்ளாக இருந்தாலும், இனிக்கும் சுளைகள் உள்ளே மறைந்திருக்கும். அதுபோல் மாணவர்கள் உயர வேண்டும் என்ற கண்டிப்பு! இதயத்திற்குள் அவர்கள் உயர்வின் மீது அன்பின் கனிவு.

BE SINCERE!

BE HONEST!

BE HARD WORK!

இதுதான் அவர் மாணவர்களுக்கு வழங்கிய மூன்று இலட்சியக் கொள்கைகள்.

உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் எந்த மாணவனும் உறக்கத்திலேயே கரிம வேதியியல் பாடத்தில் "அல்கேன்" சூத்திரத்தைக் கூறு என்றதும் $C_nH_{2n}+2$ என்று உரக்கச் சொல்லுவான். மாணவர்களின் ஆழ்மனதில் பதிவதற்கு ஏற்றவாறு கண்டிப்பான கற்பித்தல் உத்தியைக் கையாள்வார்.

ஒருமுறை வேதியியல் ஆய்வுக்கூடத்தில் பண்பறி பகுப்பாய்வு சோதனை (Qualitadive Analysis) யில் ஒரு வேதி உப்பின் மூலத்தினைக் கண்டறிகின்ற சோதனையில் நாம் ஈடுபட்டிருந்த பொழுது நமக்கு திடீரென்று மயக்கநிலை ஏற்பட்டது.

கல்லூரி நாட்களில் காலை உணவைத் துறந்து விடுவது வழக்கம். காலை உணவை எடுத்துக்கொள்ளாது, நெடுநேரம் நின்று கொண்டே ஆய்வுக்கூடத்தில் சோதனைகளைச் செய்து கொண்டு இருந்த பொழுது, வேதிப்பொருளை ஊதுகுழல் வழியே சூடுபடுத்தும்போது ஏற்பட்ட புகை நெடியால் மயக்கம் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் மயக்கம் சிறிது தெளிந்த நிலை. அப்போதும் ஆசிரியர் சேதுராமன் கண்டிப்பாக சோதனைகளைத் தொடர்ந்து செய்யச் சொல்லிவிட்டார். அப்படி மாணவர்களின் படிப்பின்மீது கண்டிப்பு! பாடம் நடத்தும்போது பாடக் கருத்துக்களை கேட்காத செவிகளைத் திருகுவார்; பாடச் சிந்தனைகளை கேட்காத தலைகளில் குட்டுவார்!

"கல்லூரி மாணவன் உயரத்திற்கு இவை எல்லாம் சரியா" என்று மாணவர்களில் சிலரின் முனகல்கள் கேட்கும்! அவர் அதைப் பொருட்படுத்தமாட்டார். மாணவர்களின் கல்வியில் மட்டுமே கவனம் செலுத்துவார்.

நம்மீது தனிக் கனிவு! அன்பு காட்டுவார்! வேதியியல் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான மாணவர் பிரதிநிதியாக நம்மை நியமனம் செய்தார்.

காலச் சக்கரம் சுழன்று ஓடுகின்றது. சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த நிகழ்வுகள். சில ஆண்டுகளுக்கு முன்பு கல்லூரி விழாவிற்கு நாம் சென்ற பொழுது அவர் உடல்நிலையில் பெருத்த மாற்றங்கள்! திரைப்பட நடிகரைப் போல தோற்றமுடைய அவரின் இரு சிறுநீரகங்களும் பழுதடைந்திருந்தன. "நோய்வாய்ப்பட்ட நிலையில் கல்லூரிப் பணிக்குச் செல்லவேண்டாம் என்று உயர்ந்த பணிகளில் உள்ள அவரின் பிள்ளைகள் வலியுறுத்திய பொழுதும், நான் என் பிள்ளைகளுக்காக கல்லூரிக்குச் செல்வேன். கடமையாற்றுவேன்" என்றார்.

கல்லூரிக்கு தேசிய தர மதிப்பீட்டுக் குழு வருகைபுரிந்தபோது, தரமதிப்பீட்டுக்குழுவை சந்தித்து வந்த நம்மை வேதியியல் ஆய்வுக் கூடத்திற்கு செல்லவேண்டுமென தத்தி, தத்தி கைப்பிடித்து அழைத்துப் போனார்! ஆய்வுக்கூடத்தைக் காட்டினார். பிரமாண்டமான ஆய்வுக் கூடத்தில், அவர் தம் மேசை மீதிருந்த, திரையிட்ட ஒரு படத்தை திறக்கச் சொன்னார்! திரையை விலக்கியவுடன் நம் உருவப்படம் இருந்தது!

"இதுதான் என் இதயத்தில் உள்ள உருவம்!" என்று கரங்களைப் பற்றிக் கண்ணீர் சொர்ந்தார். நம் இதயம் நெகிழ்ந்தது! ஒரு நல்லாசிரியர் இதயத்தில் இடம் பெற்றிருப்பதைவிட பேறு என்ன இருக்க முடியும்! இன்று அந்த நல்லாசிரியர் சேதுராமன் அவர்கள் படமாகிவிட்டார்! இல்லை அவரே பாடமாகிவிட்டார்!

இரண்டு நாட்களுக்கு முன்பு பொதிகைத் தொலைக்காட்சியில் திருவெம்பாவைப் பாடலுக்கு விளக்கஉரை ஆற்றியபொழுது "மணிவாசகருக்கு கிடைத்த ஞான ஆசிரியர் இறைவன்! இறைவனுக்கும், மணிவாசகருக்கும் உள்ள உறவைச் சொல்லும்போது இன்றைய ஆசிரியப் பணியின் நிலையைக் கூறும் பொழுது, நம் உள்ளத்து உணர்வுகளில் கரைந்திருந்த ஆசிரியர் சேதுராமனின் இந்நிகழ்வையே குறிப்பிட்டோம்.

இந்த உரை ஒளிபரப்பான இரண்டு தினங்களுக்குப் பிறகு ஆசிரியர் சேதுராமன் மறைந்துவிட்டார்.

ஆசிரியர் சேதுராமன் உலகைவிட்டு மறையப்போகிறார் என்று நமக்குத் தெரியாத நிலையில்தான் திருவெம்பாவை

விளக்கத்திற்கு அவரைப் பற்றிச் சிந்திக்கும் உணர்வினை இறைவன் நமக்கு ஏற்படுத்தியிருக்கிறான் போலும். இது இறைவனின் திருநிகழ்வு!

கடைசி மூச்சுவரை காலம் எல்லாம் மாணவர்களுக்கு பாடம் நடத்திய அவர் படமாகிவிட்டார்! இல்லை அவரே பாடம் ஆகிவிட்டார்.

BE SINCERE!
BE HONEST!
BE HARD WORK!

என்ற அவரின் கொள்கை முழக்கம் நம் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

அவர்தம் இழப்பால் வருந்தும் குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும், நட்புகளுக்கும், கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இறைவனின் திருவடி நிழலில் ஆசிரியர் சேதுராமன் அவர்களின் ஆன்மா இன்ப அமைதி பெற பிரார்த்தித்துக் கொள்வோம்.

தம் அறிவு, ஆற்றல் முதலியவற்றை வியந்து கொள்பவர்களுக்கு, மற்றவர்களிடம் உள்ளதை ஒப்பு நோக்கி அறிந்து பெறும் வாய்ப்பு இல்லாமல் போகும். ஆதலால், மெச்சிக் கொள்ளக்கூடாது. அதோடு தம்மைத் தானே வியந்துகொள்ளும் நிலையால் தாமே வியந்து கொள்பவர்கள் பெருமித உணர்வால் விழிப்பு நிலை இழந்து முற்காப்புச் செயலிழப்பர். செயல்கள் என்றாலே நன்மை நோக்குடையன என்பது பொதுவிதி. தனக்கும் மற்றவர்க்கும் நன்மை பயக்காத செயல்களை நினைத்தலும் செய்தலும் கூடாது.

நன்மைதரும் செயல்களே வாழ்நிலையை நிர்ணயிக்கக் கூடியன என்பதறிக.

- அருள்நெறித்தந்தை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அப்பர் விருந்து

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

31. திருநாவுக்கரசர்

தமிழ் இலக்கிய உலகில் திருக்குறள் காலத்தால் மூத்தது. திருக்குறளை இலக்கியம் என்று மட்டுமே நம்முடைய சான்றோர் கருதுவதில்லை. திருக்குறள் ஒரு மறை நூல்; அதனால் அப்பரடிகள் திருக்குறளைத் தமது திருமுறைப் பாடல்களில் அணியென எடுத்து ஆண்டிருக்கின்றார். வள்ளுவர், இனியவை கூறல் அதிகாரத்தில்,

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

என்று ஓதுகிறார். ஆழமான கருத்துடையது. சுவைமிக்க கனி துய்த்தற்குரியதாக – உரிமையுடையதாக இயல்பில் இருக்கிறது. ஆனால், அறியாமையின் காரணமாக அந்தக் கனியினைத் துய்த்து மகிழாமல் துவர்க்கும் காயினை, துய்த்தற்குத் தகுதியில்லாத காயினை, உரிமையில்லாத ஒன்றினை, உரிமையுடையோர் அறியாமல் கவர முயற்சி செய்வது ஏன் என்று கேட்கிறார். இனியன பேசுதல் இயற்கை. இந்த இனிய குறளினை அப்பரடிகள் கனி இடத்தில் சிவநெறியினையும், காய் இடத்தில் புறச் சமயத்தினையும் எண்ணி, இசைத்துப் பாடுவது படித்து இன்புறத்தக்கது.

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொ ழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி
உழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலை குயில்கூவ
மயிலாடும் ஆரு ரரைக்
கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேனே

என்பது அத்திருப்பாட்டு.

அப்பரடிகள் சிறந்த உவமைகளின் மூலம் உண்மைகளை விளக்கவல்லவர். இன்றைய மனித சமுதாயத்தில் 'தனிஉரிமை',

'பொது உரிமை' என்ற சொற்கள் பெரு வழக்கில் வழங்கப்பெறுகின்றன. தனி உரிமை - பொது உரிமை என்ற சொற்கள் பெருவழக்காதல் வளரும் சமுதாயத்திற்கு நல்லதல்ல. 'ஏன்' தனி உரிமையும் பொது உரிமையும் இன்று ஒன்றோடொன்று மோதக்கூடச் செய்கின்றன. தனி உரிமையும், பொது உரிமையும் அரும்பும், மலரும்போல் ஒன்றையொன்று தழுவி நிற்கவேண்டியவை. தனி உரிமை, பொது உரிமை ஆகியவற்றில் முதலிடம் கொடுத்துப் பேணத்தக்கது பொது உரிமையேயாம். பொது உரிமை தாய்; தனி உரிமை சேய். ஆனால், சமுதாயப் பேரறிவு வளராததனால் தனி உரிமையிலிருந்துதான், பொது உரிமை தோன்றுகிறது என்ற கருத்து மேலோங்கியிருக்கிறது. ஆனால் மனித சமுதாய வரலாற்றுப் படியும், வாழ்வியல் முறைப்படியும் பொது உரிமை தோன்றுகிறது. நம்முடைய சமுதாயத்தில் தனி உரிமை உணர்வு வளர்க்கப்பட்டமையின் காரணமாகப் பொது உரிமையைவிடத் தனி உரிமையே முதன்மைப்படுத்தப்பட்டு வருகிறது. இன்றும் நம்முடைய சமுதாயத்தில் பொது உரிமை இயக்கங்களாகிய கூட்டுறவு இயக்கங்கள் பலவீனமுற்றே இருக்கின்றன.

அரசு வழிப்பட்ட பொதுத் தொழில்கள், தனியார் தொழில்களை விட - தனியார் தொழில்களை நோக்கிடச் செழுமையான இலாபங்களைத் தரவில்லை. ஏன்? நம்முடைய சமுதாயத்தின் பொது நிறுவனங்களாகிய கோயில்களை எடுத்துக்கொள்வோமே; அவைகளைப் பேண வேண்டுமென்ற உணர்வு எல்லாருக்குமா இருக்கிறது? இல்லவே இல்லை; இன்று கோயில்களைப் பேணும் பொறுப்பு ஏற்றிருக்கின்ற சிலரிடத்தில்கூட 'அது பொது; ஆதலால் பேணுகிறோம்' என்ற உணர்வு இல்லை. இங்ஙனம் பேணுவோரில் சிலருக்கு அது 'வேலை'; பலருக்கு அது 'பிழைப்பு'! அதனாலேயே நம்முடைய பொது நிறுவனங்களுடைய உடைமைகளும் முதலீடுகளும், பல்கிப் பெருகவில்லை. அண்மைக் காலமாகப் பொது நிறுவனங்களும் வளர்ந்து வருகின்றன. இது நல்ல திருப்புமுனை.

சமுதாயத்தின் இழிமனப் போக்கு இன்று நேற்றுத் தோன்றியதன்று. அப்பரடிகள் காலத்திலும் இதே நிலைமைதான். ஊர் நடுவே ஒரு மன்றம். மன்றம் என்றால் பொது இடம். நம்முடைய இறைவன் மன்றிலாடுகின்றான். மன்றத்தையே 'பொதுவில்' என்றும் அழைப்பதுண்டு. மன்றத்திலாடும் இறைவன் என்றால், இறைவன்

உலகுக்குப் பொது என்பது பொருள். உலகத்தின் முதல் பொதுவுடைமைத் தலைவன் இறைவனே. அவன் மகிழ்ந்தாடிய இடம், மன்றம். அந்த ஆனந்த வெள்ளத்தமுதில் திளைப்பவர்கள் உலகத்து மக்கள். இங்ஙனம் பொதுமைக் கரு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழகச் சமய நெறியில் கால்கொண்டுவிட்டது. ஆயினும் பழக்கங்கள் அக்கருவை மூடிமறைத்துச் சிதைத்துவிட்டன.

மன்றம் பலர் கூடுமிடம். ஆங்கு நிழல் தருவதற்கான மரங்கள் தோன்றி இடர்களைக் களைந்து வளர்ந்திருக்கும். நிழலில் கூடியிருந்து மகிழ்ந்தவர்கள், நிழல் தந்த மரங்களைப் பேணுவதில்லை; பேணாதது மட்டுமின்றித் தேவைக்கேற்பச் சிறிதும் பெரிதுமான கொம்புகளை ஒடித்துச் சேதப்படுத்துவர். தொங்கும் கிளைகளை மாடுகளும் கடித்து மேய்ந்து அழிக்கும். நோய் தரும் பூச்சிகள் ஒட்டி மரங்களை உருக்குலைக்கும். இங்ஙனம் மன்றத்தில் நின்ற மரமாயினும் - மன்பதைக்குப் பயன்படுவதாயினும், அம்மரம் பேணுவாரின்றிப் பெருந்துன்பமே உறுகின்றது. காரணம் மன்றத்தில் நின்ற மரம்! வீட்டருகே நின்ற மரமாக இருப்பின் நன்கனம் பேணுவர் என எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

'தாம் வளர்த்ததாக இருப்பின், நச்சு மரமேயானாலும் கொல்லமாட்டார்கள்' என்று மணிமொழி பேசுகிறது. வளர்த்த பாசம் அத்தகையது. மன்றத்தில் நிற்கும் மரமும், பொது இடத்தில் நிற்கும் மரமும், படும் துன்பத்தைத் துன்பத்திற்கு எல்லையாக எடுத்துக் காட்டுகின்றார் அப்பரடிகள். ஆதலால் அப்பரடிகள் காலத்தும் பொதுமை உணர்வு தோன்றவில்லை; பொதுவுரிமைப் பொருள்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வும் வளரவில்லை.

தனியுரிமையும், தனி மனித உணர்வும் நஞ்சென வளர்ந்து மனித குலத்தை அரித்துக் கெடுத்திருக்கின்றன. மனித சமுதாயம் என்ற ஒப்பற்ற மாளிகை, 'நான்', 'எனது', என்ற இரண்டு 'இடி'களால் தகர்க்கப்பட்டு வந்திருக்கிறது. 'நானிலும்' 'ஒரு மனித'னிருக்கிறான். 'நாமிலும்', ஒரு மனிதனிருக்கிறான். 'எனதி'லும் ஒரு 'மனித'னுடைய உரிமை உணர்வு இருக்கிறது. ஆனால் இரண்டிற்கும் இடையே வேற்றுமை! 'யான்', 'எனது' என்ற உணர்வு வெறுப்பை வளர்க்கிறது; பகைமையை வளர்க்கிறது. பாதுகாப்பின்மையைத் தோன்றுவிக்கிறது. 'நாம்',

'நமது' என்ற உணர்வு அன்பைப் பெருக்குகின்றது; உறவை வளர்க்கின்றது; பாதுகாப்பைத் தருகின்றது.

தனி உரிமையில் பொதுவுரிமை அடங்காது. பொது உரிமையில் தனியுரிமை அடங்கும். ஆயினும், வழிவழி சமுதாயத்தில் வேண்டிய அளவு பொதுமையுணர்வு வளரவில்லை. 'நான்', 'எனது' என்ற உணர்வு, மனிதனுடைய உத்வேகத்தை அழிக்கிறது. தனி மனிதன் ஒப்பற்ற காரியங்களைச் செய்யவே முடியாது. இதனை உணர்த்தவே மிகப் பருமனான ஒரு தேரைப் பலர் கூடி இழுக்கும் மரபைச் சமயநெறி தோற்றுவித்தது. ஆயினும் என்? தேர் இழுக்கப்பெறுகிறது. ஆனாலும், சமுதாயப் பொதுவுணர்வு தோன்றவில்லை. தேரோட்டம் ஒரு சடங்காகப் போய்விட்டது. அதனால், தேரோட்டத்திலும் சண்டைகள் தோன்றிவிட்டன!

மனிதன், ஒன்றில் ஒன்ற வேண்டும். அந்த ஒன்று கடவுள்; எல்லா உலகுக்கும் ஒருவனாக இருக்கின்ற கடவுள்; அவன் அவனுமல்லன், அவனுக்கு ஒன்றென்றே பெயர் கூறினும் பொருந்தும். அவனையே 'எல்லா உலகமும் ஆனாய் நீயே' என்று அப்பரடிகள் பாராட்டுகிறார். 'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்' என்று சாத்திரம் பேசும். 'ஞாலமே விசும்பே இவை வந்து போம் காலமே' என்று மணிமொழி பேசும். அந்த ஒன்றில் வேறுபாட்டுணர்வு அற்று, ஒன்றிக் கலந்தால் துன்பம் வாராது என்ற கருத்தை அப்பரடிகள் இனிது விளக்கிப் பாடுகின்றார். அதாவது, தனிமை துன்பம் தரும். பொதுமை இன்பம் தரும். கடவுள் ஒன்று. அதுவே உலகத்திற்கு ஒன்று. அந்த ஒன்றை ஒன்றியிருந்து நினைத்தால் இன்புறலாம் என்பதாகும்.

மன்றத்துப் புன்னைபோல மரம்படு துயரமெய்தி
ஒன்றினா லுணரமாட்டே னுன்னையுள் வைக்கமாட்டேன்
கன்றிய காலன்வந்து கருக்குழி விழுப்பதற்கே
அன்றினா னலமந்திட்டே னதிகைவீ ரட்டனீரே.

என்பது அப்பர் திருப்பாட்டு.

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் பிற ஆக்கங்களில் இடம்பெறும் கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

– ஆசிரியர்

ஓமந்தூராரின் ஒப்பரிய நேர்மை!

(கவிவேந்தர். கா. வேழவேந்தன்)

அன்றொருநாள் ஓமந்தூர் இராம சாமி
ஆட்சியிலே முதல்வரென இருந்த நேரம்
சென்றிருந்தார் நெல்லைக்கோர் நிகழ்ச்சிக் காக;
சிறப்புடனே விழாநிகழ்ச்சி முடித்த பின்னர்,
குன்றேறி ஓடிவரும் அருவி தன்னில்
குளிப்பதற்கே "குற்றாலம்" சென்ற டைந்தார்!
அன்றிரவு விடுதியிலே தங்கி, காலை
அவருடைய மகிழுந்தில் பயண மானார்!

சென்னைஇல்லம் அடைந்தபின்னர் பெட்டி யோடு
சேர்ந்திருந்த "பலாப்பழ"த்தைக் கண்ட செம்மல்,
"என்ன இது?" எனக்கேட்டார்; "விடுதி தன்னில்
ஏராளமாய்க் கனிகள் குலுங்கக் கண்டே,
ஒன்றைமட்டும் வெட்டிவந்தேன், தவறா?" என்றார்
ஓட்டுநரும்! முதலமைச்சர் கோபத் தோடே,
"இன்றே நீ பேருந்தில் குற்றா லம்போய்
இதைத்தந்தே இரசீதுபெற்றுத் திரும்பு" என்றார்!

"கனிவிலையே ஒருருபாய்; போய்த்தி ரும்பக்
கால்நூறா?" ஓட்டுநரும் கேட்டார்; "ஆமாம்;
உனதுசெயல் பெருங்குற்றம்; பயணத் திற்கே
உரியதொகை கடனாகத் தருவேன்; செல்,நீ!
"எனைப்பற்றி அவர்களென்ன நினைப்பர்? என்கீழ்
இருக்கின்ற ஓட்டுநரே சுருட்டும் போதில்,
அனைத்துக்கும் பொறுப்பான முதல மைச்சர்
அளவின்றிச் சுருட்டாரோ? என்பர்" என்றார்!

———

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

உலக மெய்யியலும் திருக்குறள் மெய்யியலும் – தொடர்

(சித்தாந்த நன்மணி. முனைவர். கா. அரங்கசாமி)

14. தமிழர் மெய்யியல் - அறிவர் (சித்தர்) மெய்யியல் - தொடர்ச்சி

முன்னுரை :

திருமந்திரம் தமிழர் மெய்யியலின் தலைநூல். அக்காலத்தேயே தமிழர்கள், தமிழ் மன்னர்கள் சமசுகிருத அடிமையாயினர். உலகெங்கும் இருவகைப்பட்ட மக்கள் உளர் என்பார்கள். ஒருகூட்டம் உணவு தேடித்திரியும். வேறு கூட்டம் அறிவு தேடி அலையும். தமிழ் மக்கள் உணவுதேடி உண்பதே தொழில் எனக் கொண்டனர். திருக்குறள் போன்ற உலக அறிவு நூற்களைப் பெற்றும் பாமரர்களாய்ப் பாழ் போயினர். இன்றும் பாழ்போவர். திருக்குறள் கூறும் அறிவின் விளக்கம் காணின் இன்று அறிஞர் என்பார் கூட இல்லை எனலாம். அறிவினான் ஆகுவதுண்டோ? என்ற வினாக்கேட்டு அவர்கூறும் விடையைக் காணின் மண்மாசு, காற்று மாசு முதலான மாசுகள் அற்ற உலகம் படைப்பதே அறிஞர்தம் கடன் எனல் காண்க. அதனால் திருக்குறள் போற்றும் அறிஞர்களும் இலர் ஆயினர். சித்தர் நெறியைக் காத்து வந்திருப்பின் உலகை வெல்லும் ஆற்றல் பெற்று உயர்ந்து இருக்கலாம் என்பதையும் நாம் உணர்தல் வேண்டும். எனவே இழந்த சிறப்புக்களைப் பெற நாம் தொடர்ந்து முயலல் வேண்டும். அதற்கான அடித்தளத்தை நாம் அமைத்திடல் வேண்டும். அதனை இக்கட்டுரை செய்யும்.

திருமந்திரச் செய்திகள்

திருமந்திரம் கூறும் மந்திரம், தந்திரம் என்பதன் உட்பொருள் அறிதல் வேண்டும். ஏற்கெனவே இதற்கான விளக்கம் கூறப்பட்டுள்ளது. மாந்த தரத்தை – உயர்த்தி மாந்தனைத் தெய்வ நிலைக்கு உயர்த்துவது மந்திரம் என்றும்; அதற்காக உடலினை ஒரு வழியில் சித்தர் நெறியில் – நின்று காப்பது தந்திரம் என்றும் அறிந்தோம். இதனையே திருமந்திரம் 3000 பாடல்கள் வழிக்கூறும். மேலும் திருமந்திரம் தமிழர்கண்ட மெய்யியல், சமயம், வாழ்வியல் நுட்பம் கூறும். அதனைப் பற்றி ஆய்வதே சிறப்பு ஆய்வாம். இங்குத் திருமந்திரம் கூறும் சிறப்புச் செய்திகளை மட்டும் பகுத்துக் காண்போம். அவற்றை 48 தலைப்புகளில் காண்போம். அவையாவன.

1. திருமந்திரம் கூறும் அறிவர் நெறி - உட்பொருள்.
2. திருமந்திரத்துக்கு ஒவ்வொரு சொற்கும் நான்கு வகைப்பொருள். (இயல்புப் பொருள், மந்திரப் பொருள், தந்திரப் பொருள், மெய்யறிவுப் பொருள் எனப் பகுத்து ஆய்தல்).
3. திருமந்திரம் கூறும் மந்திரம் என்பதன் நுட்பம்.
4. திருமந்திரம் கூறும் சக்கரங்கள் - அதன் உட்பொருள்.
5. திருமந்திரத்தில் சக்தி வழிபாடு - அல்லது உடல் வழிபாடு.
6. திருமந்திரத்தில் உள்ள தமிழர் வழிபாட்டுக் கூறுகள்.
7. திருமந்திரம் தரும் புராணத் தொன்மம்.
8. திருமூலர் வரலாறும் உண்மையும்.
9. திருமந்திரம் கூறும் சமய விகற்பங்கள்.
10. திருமந்திரத்தில் உள்ள அகவழிபாட்டு நெறிகள்.
11. திருமந்திரம் கூறும் ஆகமம் என்பதன் நுட்பம்.
12. திருமந்திரத்தில் சமசுகிருத வேதமறுப்புக் கோட்பாடுகள்.
13. திருமந்திரத்தில் ஒன்பது ஆகமம்.
14. ஒவ்வொரு தந்திர உட்பொருள்கள்.
15. திருமந்திரத்தில் ஒழுக்கவியல்.
16. திருமந்திரத்தில் அறவியல்.
17. திருமந்திரத்தில் அரசியல்.
18. திருமந்திரப் பொருளியல்.
19. திருமந்திரப் பண்பாட்டியல்.
20. திருமந்திர சமூகவியல்.
21. திருமந்திர இலக்கியப் பாங்கு.
22. திருமந்திர நோக்கும் போக்கும்.
23. திருமந்திரம் ஏன்? எதற்காகத் தோன்றியது?
24. ஒவ்வொரு பாடலின் அரும் பொருட்கள்.
25. திருமந்திர காலம்.
26. காலக்கோட்பட்ட கூறுகள்.
27. காலம் கடந்த செய்திகள்.
28. தமிழர் கண்ட சமயக் கூறுகள்.
29. திருமந்திர இயற்கைச் சமயம்.
30. பாமரர் வழிபாட்டுக் கூறுகள்.
31. அறிவர் (சித்தர்) வழிபாட்டு நெறிகள்.
32. மெய்யியல் வழக்காறுகள்
33. உலகியல் நிலைகள்
34. ஒகுமுறைகள் (யோக முறைகள்)
35. ஒகுமுறையின் பல்வேறு படிமங்கள்

36. அட்டாங்க யோகம்
37. சித்தர்தம் கடவுள் காட்சி
38. சித்தர் மெய்ப்பொருள்
39. சித்தர்தம் உண்மைச் சமயம்
40. சித்தர்தம் சமயமுறைகள் (எவ்வண்ணம் அதனைக் கண்டனர்)
41. சித்தர்தம் நோக்கம் என்னென்ன?
42. திருமந்திரத்தில் ஏன் மறைபொருட் கூறுகள்?
43. மறைபொருட்கூறுகளின் உண்மையும் தன்மையும்
44. திருமந்திரத்தில் சித்தர் நெறிக்கூறுகள் இடம் பெற்றுள்ள பாங்கு.
45. திருமந்திரத்தில் சிவசமயக் கூறுகள்.
46. சிவசமய மெய்ப்பொருட்கூறுகள்.
47. திருமூலர் வரலாறு - பெரியபுராணம் கூறும் நுட்பம்
48. திருமந்திரம் மெய்யியல் ஒட்பம்.

மேற்கண்டவாறு திருமந்திரத்தை ஆய்வு செய்யலாம். அதற்கு மேலும் ஆய்வு செய்யத் திருமந்திரம் இடம் தரும். எனவே எல்லையற்ற கடவுள் போல திருமந்திரம் விரியக் காண்க. நாம் அதன் மேற்பரப்பினை மட்டும் காண்போம்.

திருமந்திர மெய்யியல்

திருமந்திரம் மெய்யியல் நூல்; சமயம் சார்ந்த மெய்யியல் நூல். ஒரு சாதனை செய்து தன்னை அறிதல், தனது மூலமுதலை அறிதல், தான் உலகிற்கு வந்த நோக்கத்தை அறிதல், தனது வாழ்வின் வான் பயனை அறிதல் பற்றித் திருமந்திரம் விளக்கும். அப்பாடல்கள் சிலவற்றைக் கீழே காண்போம்.

> "தன்னை யறியாது உடலைமுன் தானென்றான்
> தன்னைமுன் கண்டான் துரியந் தனைக்கண்டான்
> உன்னுந்துரியமும் ஈசனோ டொன்றாக்கால்
> பின்னையும் வந்து பிறந்திந் தானே" (2225) என்றும்

> "தன்னை யறிசுத்தன் றற்கேவ லன்றானும்
> பின்ன முறநின்ற பேத சகலனும்" (2187) என்றும்

கூறியதுடன் தன்னையும் தன் உயிரினையும் இயக்கும் தலைவனை அறிதல் பற்றியும் உடலினுள்ளே உறுபொருள் கண்டு உடலினை ஓம்புவது பற்றியும் அவர்கூறிடக் காண்க. இச்செய்திகளைக் கூறும் கீழ்வரும் பாடல்களைக் காண்க.

"தன்னையறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானேகெடுகின்றான்" – 2315 என்றும்
"தன்னையறிந்து சிவனுடன் தானாக ....
...."

நன்னது ஞானத்து முத்திரை நண்ணுமே (2292) என்றும் கூறும்போது உயிரினச் சிவனாக்கும் வித்தையைக் கூறக் காண்க. இங்கு திருக்குறள் கூறும் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வமாவான்" என்பதையும் உடன் எண்ணுக.

மேலும்,

"தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்" (2565) என்ற பாடலில் உடல் வாழ்வினும் உயிர்வாழ்வால் உயர்ந்து மெய்யறிவு பெறுதல் பற்றிக் கூறக் காண்க. மற்றும்,

"தன்னைப்பரனைச் சதாசிவன் என்கின்ற" – (1406)
"தன்னையறியாது தான் நல்ல ரென்னாதிங்" – (112)
"தன்னுளுமாகித்" (1326); "தன்னில் தன்னை" (2310)
"தன்னது சாயை" (212) "தன்மைவல்லோனைத்" (2595)

என்பனவற்றுடன், கீழ்க்கண்டவற்றையும் காண்க;

"நமன்வரின் ஞானவாள் கொண்டு எறிவன்" (2927)
"அறிவு அறிவாக அறிந்து அன்பு செய்மின்" (2320)
"அறிவு வடி வென்றறியாத என்னை
அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி" (2317)

"சுத்த அறிவே தெய்வம்" என்பான் பாரதி. திருவள்ளுவர் "வாலறிவன்" என்பார். திருமந்திரம் தூயமெய்யறிவே சிவம் என்று கூறிடக் காண்க. இதனால் தூய மெய்யறிவுக் கடவுளைக் கண்டு காட்டும் திருமந்திர மெய்யியலை நாம் உணர்தல் வேண்டும். ஆனால் இன்றைய உலகினர் தூய மெய்யறிவு தேடாமல் வீண் போகக் காண்க.

முடிவுரை :

மேற்காட்டியவற்றால் தன்னை யறிதலும், தனது உடலின் ஆற்றலை அறிதலும், அனைத்துயிர்க்கும் அன்பு செய்தலும் அன்புச் சிவத்தை அறிவாக அறிதலும் திருமந்திரத்தின் அடித்தள நோக்காகும். எனவே திருமந்திரம் கூறும் மெய்யறிவுச் சான்றோராக உலகம் வளம் பெறல் வேண்டும். இன்றேல் அழிவு ஒன்றே உண்மை என்பதையும் நாம் அறிதல் வேண்டும். திருமந்திரம் கூறும் சித்தர்கண்ட மெய்ப்பொருள் அறிவியல் ஆக்கம் என்பதையும் பகுத்தறிவுப் பார்வை கொண்டது என்பதையும் நாம் அறிதல் வேண்டும்.

(தொடரும்)

அப்பரின் சொல்லாட்சி

(தருமையாதீனப் புலவர். தா. குருசாமி தேசிகர்)

சொற்கு உறுதி அப்பர்? என்பது சமய உலகச் சொல்லடை. "அப்பரின் அருந்தமிழ்" மொழியியல் ஆய்வாளர்களுக்கும், தமிழன்பர்களுக்கும் இன்பந் தருவதாகும். அருளநுபவத்தை அழகாகப் பதிவு செய்தவர்களில் அப்பர் தலைசிறந்தவர் என்று தனிநாயக அடிகள் கூறுவர். கையில் உழவாரப் படையுடன் தமிழ்நாட்டுத் திருக்கோவில்கள் தோறும் மெய்யன்பர் சூழ வழிபட்டவர் அப்பரடிகள். அப்பரது திருமுறைகளில் புதிய தமிழ்ச் சொற்கள் "பொலிவுபெற்று" விளங்குகின்றன. நான்காந் திருமுறையில் ஒருசில தமிழ்ச் சொற்கள், தமிழ்ச் செம்மொழிக்கு கட்டமைப்பாக உள்ளன எனலாம்.

மருணீக்கியார்

அப்பரடிகளுக்கு முதலில் தாய்தந்தையர் இட்ட பெயர் "மருள் நீக்கியார்!" இப்பெயர் திருக்குறள் தொடர்புடையது.

"இருணீங்கி யின்பம் பயக்கும் மருணீங்கி
மாசறுகாட்சியவர்க்கு"

என்ற குறளில் மருள்நீங்கி, என்ற சொல், அப்பரின் தந்தை புகழனார் "உள்ளத்தைக் கவர்ந்த காரணத்தால், அச்சொல்லையே, தன்பிள்ளைக்கு இட்டார். அச்சொல்லின் உண்மைப் பொருள் என்ன? "மருள்" என்பதற்கு "அவிச்சை" என்று பொருளுரைப்பர் பரிமேழலகர். "அவிச்சை" என்பது விபரீத ஞானமாகும்.

விபரீத ஞானம் யாது?

"மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளும் இல்லை எனவும், மற்றும் இத்தன்மையவுஞ் சொல்லும் மயக்க நூல் வழக்குக்களை, மெய்ந்நூல் வழக்கெனத் துணிதல்; மரக்கட்டையை மகனென்றும், இப்பியை வெள்ளி என்றும் இவ்வாறே ஒன்றனை பிறிதொன்றாகத் துணிதல் என்றும், பரிமேலழகர் விளக்கம் கூறியபின்பு, "மருள் – மயக்கம் – விபரீத உணர்வு, அவிச்சை என்பன ஒருபொருட்கிளவி" என சொற்பொருள் நல்குவார். அப்பரின் தந்தையார் நினைத்து வைத்த "மருள்நீக்கியார்" என்னும் பெயர், உயர்வானது. அப்பெயரின் பொருளை நீக்கி, அப்பர் சமணிருளில் மூழ்கி, பின்பே தந்தை வைத்த பெயரைத் தக்கவைத்துக்கொண்டார். அதுவும் பின்பு

அரனாராலேயே தீக்கை நாமமாக "திருநாவுக்கரசர்" எனப் பெயர் பெற்றார். சமண் சமயம் புகுந்துமீண்டதன் பின்பு மருணீக்கியார் பெயர் மறைந்தது. "தருமசேனர்" ஆன மருணீக்கியார் சைவஞ்சார்ந்த பின்பு "திருநாவுக்கரசரானார்".

திருநாவுக்கரசர் பெயர் காரணம்

திருநாவுக்கரசர் எனும் பெயர், தீந்தமிழில் முதன்முதலில் பாடிய பதிகச் சொல்லாட்சியில் இன்புற்ற சிவபெருமான், தந்த தீட்சா நாமமாகும். இதனைச் சேக்கிழார் பரமனின் பல்கலைக்கழகம் தந்த பட்டமாகப் பாடி மகிழ்கிறார்.

"பாவுற்றவர் செந்தமிழின் சொல்வளப்
பதிகத் தொடை பாடிய பான்மையினால்
நாவுக்கரசென்றுல கேழினும் நின்
நாமம் நயப்புறமன்னுக"

என்று அரனாரின் அசரீயை அறிவுறுத்துவார் சேக்கிழார். இதனால் அப்பரின் சொல்வளச் செம்மையை அறியலாம்.

அரனார் மகிழ்ந்த முதற் பதிகச் சொல்மாண்பு

I கூற்றாயினவாறு : கூற்று + ஆயினவாறு : என்று பிரியும். 'கூற்று' என்பது உடம்பும் உயிரும் வெவ்வேறு கூறாகச் செய்யும் காரணம் பற்றிய பெயர். சூலைநோய் உடம்பினின்று உயிரை நீக்கும் அளவு வருத்துவதால் 'கூற்று' எனப்பட்டது. 'சூலை' கூற்று அன்று; கூற்றாயிற்று. அதனால் 'ஆயினவாறு' என்று தருமையாதீன உரைகாரர் விளக்கம் செய்வார்.

II 'கொடுமை பலசெய்தன' – சமண்சமயஞ்சார்ந்து கொடுஞ்செயல்களாகச் செய்தனபல.

III நான் அறியேன் - அறிந்து செய்தேனல்லன். அறியாமற் செய்தனவாயிருக்கும். அபுத்திபூர்வ, பாவ கன்மம் என்றபடி என்று பொருளுரைப்பர்.

IV 'ஏற்றாய்' – ஏறு–விடை : விடையை உடையாய் – விளிப்பெயர்.

V 'அடிக்கே' இரவும் பகலும் எப்பொழுதும் பிரியாது வணங்குவன்.
'அடிக்கே' – என்பது திருக்குறளின் நற்றாளைச் சுட்டும். இதற்கு ஆதீன உரைகாரர் 'அரிய' விளக்கம் நல்குவார்.

'அடிக்கே' விளக்கம் : அப்பர் அருளிய மூன்று திருமுறையுள்ளும் திருவடிச் சிறப்பு பல இடங்காணலாம்.

'சிவனடியே சிந்திக்கப் பெற்றேன்' என்பதும் இவர் திருவாக்கு.

'எம்பொருமான் திருவடியே எண்ணின் அல்லால் கண்ணிலேன்' என்பார். முதலிலும் 'அடிக்கே' என்றார். திருப்புகலூர்த்தாண்டக முடிவிலும் 'அடிக்கே' தம்மைச் சரணாக்குவார். அப்பரின் வாக்கில் திருவடிச் சிறப்பு பல இடங்களில் பரிணாமங் கொள்கிறது.

அகம்படியே : அகம்பு Xபுறம்பு : அகம், புறம் என்பவற்றில் 'புகாரம்' வரல் இயல்பு. அகம்பு + அடிமை + தொழில் = அகம்படிமைத் தொழில். திருக்கோயிலின் உள்துறைப் பணியாளர். பாடும்பணியே பணியாகக் கொள்ளுதலை இச்சொல் குறிக்கும்.

வஞ்சம் : 'வஞ்சம் இது ஒப்பது கண்டறியேன்' என்ற தொடரில் 'வஞ்சம்' என்ற சொல்லை அப்பரடிகள், 'பொய்' என்ற பொருளில் உணர்த்துவார். நெஞ்சம் இடமாக நினைக்கும் செயல் என் அநுபவத்தில் பொய் போல்வதன்று; மெய்யே என்றவாறாம். வல் + து+அம் = வஞ்சம் மரூஉ : அது தன்+து+அம் தஞ்சம் என்ற மரூஉப்போல்வது என்ற ஆதீன உரை அற்புத விளக்கமாகும்.

பணிந்தாரன : பணிந்தார்+அன்+அ. பணிந்தாரன. வினையாலணையும் பெயர். பணிந்தவரின் பாவங்களைப் போக்கவல்லவர் என்ற பொருளில் வந்தது.

பெற்றம் ஏற்றுகந்தீர் : ஏற்று - பேச்சு - பாட்டு - கீற்று முதலியன போன்ற பெயர்.

கயம் : நீர்நிலை : இயற்கைப் பள்ளம். ஒருவர், இருவர், பலர் வெட்டுவித்ததன்று என்பார்.

சலம்பூவொடு தூபம் தமிழோடிசை : என்ற அப்பரடிகளின் முதற்பதிக 6ஆவது பாடல் தொடர், முறையே அருச்சனையிலும் தோத்திரத்திலும் உள்ளன வாய் உடனிகழ்வன. முதலடிக்கண் வந்த மூன்றனுருபு உடனிகழ்ச்சிப் பொருளாகும் என்பர்.

நலம் தீங்கு : இருவினைபற்றி வரும் இன்பத் துன்பங்கள்.

புன்சடை : பொன்போலும் செஞ்சடை : புன்மை எனல் சிவாபராதம் என்பர்.

உயர்ந்தேன் மனைவாழ்க்கை : உயர்தல் – ஈண்டு நீக்கத்தைக் குறித்தது என்பர்.

வயந்து : வளர்ந்து, வயமாக்கி, என்ற பொருள் காட்டுவர்.

அப்பரின் சிவகரணம்

இம்முதற்பதிகச் சொல்லாட்சியில் அப்பரடிகள் 'உயர்ந்தேன்' என்ற சொல்லுக்கு, 'உயருமன்பழி' தாம் செய்த பழி மிகவும் போம்' என்று கலித்தொகைச் சொல்லுக்கு, நச்சர் காட்டும் உரைகொண்டு, 'நீக்கம்' என்று ஆசிரியர் உரைப்பது, அரிய பொருட்சிறப்பாகும். இதனால் அப்பரடிகள் இறைபணியில் தலைப்பட்டதை இப்பதிகத் தொடர்கள் தெரிவிக்கின்றன.

சிவனது இச்சையே தனதிச்சை என ஒழுகியவர் அப்பரடிகள். சிவனது அறிவே தனது அறிவு; சிவனது செயலேதனது செயல்; தனக்கென இச்சையும் ஞானமும், கிரியையும் உரியனவாய் இல்லை என்று சிவனுடைய இச்சா ஞானக்கிரியை நிகழ்ச்சிகட்குத் தான் ஒரு கருவியாக நின்று ஒழுகுவதே இறைபணி நிற்றலாகும். பசுகரணம் சிவகரணமாதலையே இம் முதற்பதிகம் – அப்பரடிகளது அருள்வாக்கு தெரிவிக்கும். தொடர்ந்து சொல்லாட்சி சிந்திப்போம்.

சிந்தனை வட்டம்

திருக்குறளில் தலைமைக்கான ஒருமைப் பன்மைச் சொற்கள் என்ற கட்டுரை பற்றிய கருத்துகள் : கட்டுரையாளர் "வள்ளுவர் கடவுள் வாழ்த்து" அதிகாரத்தில் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறுதான் பலரும் திருக்குறள் முதல் அதிகாரத்தை "கடவுள் வாழ்த்து" என்றே குறிப்பிட்டு வருகின்றனர். ஆனால் திருவள்ளுவர் அந்த அதிகாரத்திலோ வேறு அதிகாரங்களிலோ "கடவுள்" என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. அதனால் "கடவுள் வாழ்த்து" என்று குறிப்பிடுவது பொருத்தமாயில்லை. அந்த அதிகாரத்தில் "இறைவன்" என்ற சொல்லைத்தான் பயன்படுத்தியுள்ளார். எனவே "இறைவாழ்த்து" என்று வழங்குவதே பொருத்தமாகும். உலகத் தலைமையாகிய கடவுளை ஒருமையில் "அன்" விகுதிதந்து குறிப்பிட்டுள்ளாரே என்று கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். திருவள்ளுவர் காலத்தில் "அன்" விகுதி தந்து குறிப்பிடுவதைச் சிறுமையாகக் கருதவில்லை. ஆனால் இக்காலத்தில் அது இழிவாகக் கருதப்படுவதால் பெரியோர்களை "அன்" விகுதி சேர்த்துக் குறிப்பிடுவது தவறு. உயர்வுப்பன்மை விகுதியாகி "அர்" விகுதியைச் சேர்த்தே வழங்க வேண்டும். அப்படித்தான் எழுத்து வழக்கில் வழங்கிவருகின்றனர். ஆனால் சிலர் பேச்சு வழக்கில் மேடையில் புலவர்களின் பெயர்களை "அன்" விகுதியில் குறிப்பிடுகின்றனர். இது தவறு. கம்பன்விழா என்பதை விடக் கம்பர் விழா என்பதே சிறந்தது.

– ச.மு. விமலானந்தன், திருப்பத்தூர்

"காக்க காக்க தமிழைக் காக்க"

(தமிழாகரர். தெ. முருகசாமி)

அறிவியல் கண்டுபிடிப்பால் விளைந்த கணினி, இணையதளப் பயன்பாடு போன்ற புதுவரவுகளால் தமிழ், உலகத்தமிழாக வளர்ச்சியுற்று வரும் நிலையில் அதன் மறுபக்க வாழ்வு தளர்ச்சிக்குரியதாக இருப்பது வேதனைக்குரியதாகும். "மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்" என்றொரு பேதை சொன்னதாகப் பாரதி பாடிய கற்பனை மெய்யாகிவிடுமோ எனக் கவலையடையும் காலமாக உள்ளது. இதனால் "காக்க காக்க கனிதமிழ் காக்க" எனத் தமிழரைக் கன்னித்தமிழ்க் கவசம் பாடி வேண்டிக்கொள்ளும் சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

தமிழை ஆட்சிமொழியாகக் கொண்ட தமிழ் நாடரசான தமிழகத்திலோ புதுச்சேரி அரசான தமிழகத்திலோ அரசாங்கத் துறைகளின் சுற்றறிக்கைகள் முற்றாகத் தமிழில் இல்லை. தமிழ் மக்கள் அளவில் அறிந்து கொள்ளப்படவேண்டிய குறிப்புகள் தமிழிலும் மத்திய அரசின் தொடர்புக்காக ஆங்கிலத்திலுமாக அறிக்கைகள் இருமொழிகளில் அமையவில்லை. இருமொழிகளில் அறிக்கைகள் தயாரிப்பதால் செலவுகள் கூடுதலாகும் எனக் கருதித் தாய்மொழியைப் புறந்தள்ளுவது பகுத்தறிவாகாது.

தமிழல்லாத பிறமொழி மாநிலங்களில் அத்தகைய அவலங்கள் இல்லை. திரையரங்குச் சீட்டு, பேருந்துச் சீட்டு போன்ற எந்த மட்டத்திலும் அவரவர் தாய்மொழியிலேயே கோலோச்சுகிறது. தமிழர்களுக்கு இது தெரியாதா? தெரிந்தும் செய்ய மனம் இல்லாமையே முதற்காரணமாகும். தமிழில் கையொப்பம் இடுவதைக்கூட விரும்பாத அவலம் தொடர்கிறது. தமிழராகப் பிறந்த எவர்க்கும் தமிழ், தமிழ்மொழி, அது தமிழ் கற்போர்க்கு மட்டுமே உரியதன்று. தமிழ்நாட்டிலிருந்து கொண்டு எந்த மொழி கற்கும் தமிழர்க்கும் உரிமையானது.

பேரறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்ததும் பள்ளிகளிலிருந்த இந்திமொழி ஆசிரியர்கள் அஞ்சினர். பணிநீக்கம் வந்துவிடுமோ எனப் பயந்த நிலையில் தாயுள்ளம் கொண்ட அண்ணா அவர்கள், "அவரவர் விருப்பதிற்கேற்பக் கல்வியைக் கற்றுப் பணிபுரிவோர் அனைவரும் தமிழர்களே. இந்தியை எதிர்த்து ஆட்சிக்கு வந்ததால் இந்திமொழி

ஆசிரியர்கள் இனி அம்மொழியைக் கற்பிக்காமல் பள்ளியின் பிற பாங்கிற்கு உதவும் நிலையில் பணிபுரிந்து வருவார்கள்" எனப் பாலைவனத்தில் பிறைதெரிந்த காட்சிபோல் கவலையைப் போக்கினார், எனவே தமிழ் உணர்வும் தமிழ்க்கல்வியும் வேறு வேறானவை என உணரவேண்டும்.

வழக்கு மன்றங்களில் தமிழ் வழக்காடும் மொழியாக இல்லை. தமிழ் நலம் கருதும் வழக்கறிஞராவது தமிழில் வழக்காடலாம். தேவைப்படும் அளவிற்கு ஆங்கில விளக்கங்களைப் பயன்படுத்தலாம். முற்றாகத் தமிழ் மக்கள் பயன்படும் புண்ணியத்திற்குத் தமிழ் தேசிய மொழிகளுள் ஒன்றாக ஆக்கப்பட்டுவிட்டால் தமிழ்க்கனவு மெய்யாகிவிடும்.

திருக்கோயில்களில் தமிழ் வழிபடுமொழியாக இல்லை. தமிழில் அருச்சனை செய்யக்கூடாதெனச் சட்ட வடிவம் ஏதும் இல்லை. வேலூர் இரத்தினகிரி முருகன் – திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாடல்களையும் தமிழ்த்திருமுறைப் பாடல்களையுமே நாளும் கேட்கிறான். அவன் தீட்டுப்பட்டுக் கோயிலை விட்டு ஓடிவிடவில்லை. இதனை வடமொழிப் புறக்கணிப்பாகக் கருதாமல் தமிழ் உரிமை எனக் கொள்வதே சாலும்!

இன்று திருக்கோயில்களில் மொழியப்படும் வடமொழியான அருச்சனைகள் உண்மையான அருச்சனைப் பொருள்தாரா. அவை இறைவனின் வீரம், கருணை குறித்துச் சொல்லப்படும் சொல்லடுக்குகள். மந்திரங்களும் அல்ல. எந்த ஒரு வடநூலிலும் அல்லது ஆகமத்திலும் கோயில்களில் மொழியப்படுவனவற்றை அருச்சனையாக நிரல்படுத்தப்பட்டவையில்லை. ஆங்காங்கே உள்ள புனிதவாசங்களின் தொகுப்பு. வரிசைப்படுத்தப்பட்ட வாசகங்கள், அவை நாமாவளியாகும். நாமம் – பெயர், வளி – வரிசை. இதுபோன்ற நாமாவளிகள் தமிழிலேயும் உண்டு. அப்பரின் போற்றித் திருத்தாண்டகம், திருவாசகத்தின் போற்றித் திருவகவல்கள் தமிழிலும் கூட அருச்சனை என்ற பெயரைப் பெறா என்பதே உண்மை.

அப்படியானால் அருச்சனைக்குப் பொருள்தான் யாதெனில் தெய்வத்தமிழ்ச் சேக்கிழார் கூறியபடி, "அற்சனை பாட்டேயாகும்" என்பதாம் எனலாம். பாட்டு வேறு, நாமாவளியான சொல் வரிசை வேறு. பாட்டில் வேண்டுதலான குறிப்பு இருக்கும். நாமாவளியில் வேண்டுதலான குறிப்பு

இருக்காது. ஓர் ஆன்மா (உயிர்) தன் விருப்பத்தை ஆண்டவனிடம் இயம்புதலே கடமை. அந்த இயம்புதலை இசைத்தல் என்றும் கூறலாம். இயம்பல், இசைத்தல் என்ற சொற்கள் கூறுதல் அல்லது தெரிவித்தல் என்ற ஒரு பொருளைக் குறிப்பதாகும். அங்ஙனம் கூறுங்கால் உரைப்பாங்கிலும் இசைப்பாங்கில் மொழிவதே பெருவழக்காக இருந்ததால் பாட்டு எனப் பெயர் பெற்றது. பரந்துபட்ட இசைப்பாங்கானது பாட்டு. எனவே பாட்டான திருமுறைகள் யாவும் அருச்சனைகள் எனப்படும்.

இந்நடைமுறைப் பழக்கமானது வழிவழியான தமிழ் மரபுக்கு உகந்த ஒன்றாகும். பரிபாடலில் முருகனை அருச்சிக்கும் கடுவன் இளவெயினனார் என்னும் ஒரு புலவர் "யாம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும்" (5) என்கிறார். "ஆசிரியர் நல்லந்துவனார் என்பவர், மக்கட் செல்வம் வேண்டுவோர் "கரு வயிறு உறுக" (8) என விண்ணப்பிப்பதாகக் கூறுவதும் "செய்பொருள் வாய்க்க" (8) எனத் தொடங்கும் வாணிபம் செம்மையாக நடக்கவேண்டி விண்ணப்பிப்பதாகக் கூறுவதுமாகப் பாடப்பட்ட பரிபாடல் கூற்றுத்தான் அருச்சனைப் பொருளுக்கான பாங்காகும். இவ்வருச்சனைப் பாங்கான பங்களிப்பு அருளாளர்களின் பாடல்களில் உள்ளன. அத்தகு பாடல்களில் ஒன்றைக் கூறிப் பூசித்தலே அருச்சனை வழிபாடேயன்றி வெறும் நாமாவளிகளாக உள்ள தமிழ்ப்பாடல்களும் அருச்சனையாகா என்பதே உண்மையாம்.

இதனை எடுத்து மொழிந்தாலும் அருச்சகர்கள் பின்பற்றுவதில்லை. தடம்மாறிய அவர்களை அருச்சிக்கச் செல்வோரும் திருத்துவதில்லை. இதனால் திருக்கோயில்களில் தமிழ், தன் வாழ்வுரிமையை இழந்து தவிக்கிறது என்பதே உண்மை.

ஊடகங்களான தொலைக்காட்சி, தினசரிகள் போன்றவைகளில் மெல்லத் தமிழ் தன் அடையாளத்தை இழந்து வருவதாகவே தெரிகிறது. தொலைக்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் எந்தக் காட்சியும் ஆங்கிலமொழிக் கலப்பின் அரங்கேற்றமாகவே உள்ளன. காட்டப்படும் பாடல்களின் போட்டிகள், அவற்றின் உரையாடல்கள், நடுவர்கள் என்ற எல்லா அளவிலும் தமிழுக்கான இடம் பத்தில் ஒருபங்காகவே உள்ளது. நல்ல தமிழில் எழுதவேண்டுமா? என விளம்பரப்படுத்தும் தினசரிகள் கூடத்தாம் விளம்பரப்படுத்துவதற்கேற்பப் பின்பற்றுவதில்லை.

இப்படியாக இலக்கியத் தரமானவை ஒருபுறமிருக்க, நாட்டு நடப்புகளில் எங்கு பார்த்தாலும் தோன்றும் புதுப்புது நகரப் பெயர்களில் தமிழில்லை. எல்லாம் சிட்டியாக, கார்டன்களாக, அவன்யூக்களாக உள்ளன. தமிழ்நாட்டின் தமிழ்த்தெருவில் தமிழ்தான் இல்லை என்ற பாவேந்தரின் தமிழ் உணர்வுகள் எங்கோ ஓடி ஒளிந்துவிட்டன. பணத்திற்குள்ளா, பதவிகளுக்குள்ளா? எனப் புரியாத புதிராக உள்ளன.

மனை பிரிப்பவர் தமிழர், வாங்கி வாழப்போகின்றவரும் தமிழர், பிரிக்கப்படும் இடமும் தமிழிடமாக இருந்தும் தமிழில்லை என்பதுதான் தமிழுக்கான தீப்பேறோ? என எண்ணத் தோன்றுகிறது.

தமிழ் எழுத்தின் கருத்து நடைகளும் மறுவாசிப்பு என்ற பெயரில் காயப்பட்டு வருகின்றன. ஒருவர் தன் மனைவி கற்புக்கரசி எனக் கூறினால் அது பிறர் மனைவியரைக் கற்பில்லாதவள் என்றதன் மறுவாசிப்பின் உள்ளடக்கப் பொருள் என நுனிமரத்தில் ஏறி அடிமரத்தை வெட்டும் அவலம் உணரா நிலையில் பழந்தமிழ்க் கருத்துக்களைத் துணிந்து குறை கூறும் மதிப்பீடுகளும் தமிழ்ப் பண்பைக் காட்டிக் கொடுப்பதான கீழறுப்பு எழுத்துக்களும் வளரத் தொடங்கிவிட்டன. இதைத் தமிழ் கூறு நல்லுலகம் கண்டு கொள்ளாமல் வாளா மௌனம் சாதிப்பதும் தமிழுக்கான பின்னடைவே எனலாம்.

எனவே விநாயகர் கவசம் போல, கந்தர்சட்டிக் கவசம் போலக் "காக்க காக்க தமிழைக் காக்க" எனத் தமிழரை வேண்டிக்கொள்ளும் புதுக் கவசத் தொடரை எழுதத் தூண்டியது எனலாம்.

பிழைதிருத்தம்

2012 நவம்பர் "மக்கள் சிந்தனை" இதழில் வெளிவந்துள்ள கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களின் "வெள்ளைநிறக் கொள்ளி" என்ற கவிதையில் கடைசி வரியில் (பக்கம்.23) "வாழ்வளிக்கும் புகையிலைகள்" என்று அச்சுப்பிழை நேர்ந்துள்ளது. அதனை "வாழ்வழிக்கும் புகையிலைகள்" என்று திருத்தம் செய்து கொள்ள வேண்டுகிறோம்.

– ஆசிரியர்

பூவும் நாரும் - 15

(சாமி. தியாகராாசன்)

பழையாறைக்குச் சென்றேன்

சாமியின் பயணத்திட்டத்தில் குறிப்பிட்டிருந்த நாளில் அவர்களைச் சந்திக்கும்படி எனக்குக் குன்றக்குடியிலிருந்து கடிதம் வந்திருந்தது. குறிப்பிட்ட அந்த நாளில் காலை 10 மணியளவில் பயணியர் விடுதிக்குச் சென்று சாமியைத் தரிசித்தேன்.

வழக்கமான விசாரிப்புகளுக்குப் பின்பு நீங்கள் பழையாறைக்குச் சென்றுள்ளீர்களா எனச் சாமி கேட்டார்கள். சென்றதில்லை எனப் பதில் சொன்னேன்.

பழையாறையைப் பற்றித் தெரியுமா என்றார்கள். தெரியும், இங்கே பக்கத்தில்தான் இருக்கிறது என்பதுடன் பிற்காலச் சோழர்களின் தலைநகரமாக அது இருந்தது என்பதுடன், நாம் போற்றி வழிபடும் மங்கையர்க்கரசியார் பிறந்த ஊர் அது என்பதையும் அறிவேன் என்றேன்.

இங்கே வந்து ஓராண்டிற்கு மேல் ஆகியிருக்குமே என்றார்கள். ஆம் ஓராண்டிற்குமேல் ஆகிவிட்டது என்றேன்.

புதுக்கோட்டையைப் போன்று இங்கேயும் வெளியில் இலக்கியம், சமயம் தொடர்பாக மற்றவர்கள் பழக்கம் ஏற்படுத்திக்கொண்டீர்களா என்றார்கள்.

புதுக்கோட்டையைப் போல இங்கே இன்னும் மற்றவர்களுடன் பழக்கம் ஏற்படவில்லை. புதுக்கோட்டைத் திருக்கோயில்களின் செயல் அலுவலராக இருந்த திரு. அரங்கசாமி இங்கே சுவாமிமலை சுவாமிநாதசுவாமி கோயிலுக்குச் செயல் அலுவலராக இடப்பெயர்வு செய்யப்பட்டு வந்துள்ளார். அவர் மூலம் சிலர் எனக்குப் பழக்கமாகியுள்ளார்கள். மேலும், புலவர் கல்லூரியில் என்னுடன் பயின்ற புலவர். து. சம்புசேசன் சிறிய மலர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றுகிறார். அவர் மூலமும் சிலர் பழக்கமாகியுள்ளார்கள் என்றேன். அந்தப் பள்ளியில்தான் கவிஞர்

முகிலன் பணிபுரிகிறார். அவர் நம்மவர். அவரோடு தொடர்பு கொள்ளுங்கள் எனச் சாமி சொன்னார்கள்.

பிறகு திருக்குறள் பேரவை அமைப்பது மற்றும் தொடங்குவது பற்றிப் பேசினார்கள். பேரவையின் அமைப்புப் பற்றிச் சில குறிப்புகள் சொன்னார்கள். பின்பு மாலை 4 மணிக்கு இங்கே வந்துவிடுங்கள், நாம் பழையாறைக்குச் செல்லுகிறோம் என்று சொல்லி விடைகொடுத்தார்கள்.

சாமியிடம் விடைபெற்று அறையைவிட்டு வெளியே வந்து உதவியாளர் இராமசாமியிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்ட என்னை மெதுவாக ஒருவர் பின்தொடர்ந்து வந்து பேசத் தலைப்பட்டார். என்னைப் பற்றி விசாரித்தார். சொன்னேன். அவர் தன்பெயர் ஆதீனமிளகி என்றும், குன்றக்குடிக்கு மிக அருகில் இருக்கும் பாதரக்குடி என்ற சிற்றூர் தனது ஊர் என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டார். என்ன செய்கிறீர்கள் என்றேன். வட்டிக்கடை வைத்து நடத்துகிறேன். அவசரக்காலச் சட்டம் வந்ததால் இந்தத் தொழிலை இப்போது நடத்துவது மிகவும் சிரமமாக உள்ளது. கும்பகோணத்தில் இருப்பதா, சொந்த ஊருக்குச் செல்லுவதா என்ற குழப்பத்தில் உள்ளேன். சாமியிடம் இது பற்றிப் பேசலாம் என எண்ணியுள்ளேன் என்றார். சாமியிடம் சொல்லுங்கள் உங்கள் குழப்பத்தை அவர்கள் போக்குவார்கள், நல்ல தீர்வு சொல்லுவார்கள் எனச் சொல்லி அவரிடமிருந்து விடைபெற்றேன்.

கும்பகோணத்தில் சாமி மூலம் எனக்குக் கிடைத்த மிக அருமையான முக்கியமான நண்பர் ஆதீனமிளகி. எங்கள் இருவரின் தனிப்பட்ட பழக்கம் பின்பு குடும்பப் பழக்கமாக மாறியது. எனது குடும்ப நிகழ்ச்சியில் அவர் குடும்பமும், அவர் குடும்ப நிகழ்ச்சியில் எனது குடும்பமும் முழுமையாகப் பங்கு கொள்ளும் அளவுக்குப் பழக்கம் உறவாக முற்றியது. அவரால் நான் பெற்ற பயன் அதிகம். என்னையும் அவர் பல நேரங்களில் பயன்படுத்திக்கொள்வார். கொண்டும், கொடுத்துமாக எங்கள் உறவு காலம் செல்லச் செல்ல வலுப்பெற்று இன்றும் அது தொடர்கிறது, தொடரும்.

ஆதீனமிளகியின் குழப்பத்திற்கும் அவரது சங்கடத்திற்கும் சாமி எவ்வாறு தீர்வு கண்டார்கள் என்பதை இங்கேயே சொல்லிவிடலாம்

எனக் கருதுகிறேன். பின்பு அதற்கான வாய்ப்புக் கிடைக்காமல் போய்விடும்.

ஆதீனமிளகி சாமியிடம் தனது தொழில்பற்றிப் பேசியிருக்கிறார். அரசு கொண்டுவந்துள்ள சட்டத்தால் தன்னைப் போன்ற சிறு அடகுக்கடை நடத்துவோர் தொழிலைச் செய்யமுடியாமல் துன்பப்படுவதைக் கூறிவிட்டுப் பாதரக்குடிக்குச் செல்வதைத் தவிர வேறு எனக்கு வழியில்லை. கும்பகோணத்தில் குடும்பம் நடத்தப் போதிய வருமானம் இல்லை என்று கூறியிருக்கிறார்.

பாதரக்குடியில் இருக்கும் ஆதீனமிளகியின் குடும்பச் சூழலை நன்கறிந்திருந்த நமது சாமி, அவரைப் பார்த்து நீங்கள் அங்கே சென்று என்ன செய்யமுடியும்? ஒன்றும் செய்யமுடியாது, இங்கே இருப்பதைவிட அங்கே துன்பம்தான் மேலும் பெருகும், ஆதலால் இங்கே நமது ஆதீனத்திற்குச் சொந்தமாக "அரிவேலி" கிராமத்தில் இருக்கும் நிலத்தில் சில ஏக்கர் நிலத்தைத் தருகிறேன். அதனைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்யுங்கள், அத்துடன் வட்டிக்கடைத் தொழிலையும் நடத்துங்கள் எனச் சொல்லியதுடன் அவ்வாறே ஆதீனமிளகிக்கு நிலம் தந்து உதவி செய்து அவரைக் கும்பகோணத்திலேயே தங்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

காலத்தால் சாமி செய்த அந்த உதவி சிறியதன்று. ஆதீனமிளகியைப் பொறுத்தமட்டில் பெரியது. மிகப் பெரியது. ஆதீனமிளகிக்கு அரிவேலி கிராமத்தில் இருக்கும் ஒரு தென்னந்தோப்பினால் மட்டும் வந்த வருமானம் (மடத்திற்குக் கொடுத்தது போக) எப்படி இருந்தது என்பதைக் கொண்டே அவருக்குச் சாமிசெய்த பேருதவியை அறியலாம். மேலும், இந்தத் தோப்புத் தொடர்பான ஒரு சுவையான செய்தியையும் சொல்கிறேன்.

அரிவேலி கிராமத்திற்கு அருகில் உள்ளது மருதாநல்லூர் என்ற ஊர். கும்பகோணம் நீடாமங்கலம் சாலையில் இந்த ஊர் அமைந்துள்ளது. அந்தக் கிராமத்தில் ஒரு ரெட்டியார் குடும்பம் பெரும் பணக்காரக் குடும்பம். ரெட்டியார் காங்கிரஸ்காரர். சிறந்த பண்பாளர் எனக்குப் பின்னாளில் மிகவும் நெருக்கமானார். அவர் மகன்கள் இருவரும் எனக்கு மிக மிக வேண்டியவர்களாயினர்.

அரிவேலி கிராமத்தில் இருக்கும் குன்றக்குடி ஆதீன நிலங்களை இவர் குத்தகைக்கு எடுத்து உரிய பங்கை ஒழுங்காக ஆதீனத்துக்குச் செலுத்திவந்தார்.

நமது சாமி பட்டத்திற்கு வந்தபின்பு செய்த பல சீர்திருத்தங்களில் ஆதீனத்திற்குச் சொந்தமான நஞ்செய், புஞ்செய் நிலங்களை ஒருவரே சொந்தமாகக் குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்வதை நிறுத்திப் பலருக்குப் பங்கிட்டுக் கொடுத்து சாகுபடி செய்யவைத்தது மிக முக்கியமான ஒன்றாகும்.

அந்த வகையில் ஆதீனமிளகிக்கு நஞ்செய் நிலத்துடன் தென்னந்தோப்பு ஒன்று கிடைத்தது. அதனை ஆதீனமிளகி நன்கு பேணி வருமானத்தை அனுபவித்து வரும் காலத்தில், ஒருநாள் ஆதீனமிளகி எனது வீட்டிற்கு வந்து சாமி இப்படிச் செய்துவிட்டார்கள், எனக்கு நிலையான வருவாய் தந்த தென்னந்தோப்பை வேறு ஒருவருக்குத் தந்துவிட்டார்கள் என வருத்தப்பட்டதுடன் இதுபற்றிச் சாமியிடம் நீங்கள் கொஞ்சம் பேசவேண்டும் என்றார். நடந்தது என்ன என்று கேட்டேன்.

அரிவேலி கிராமத்தில் ஆதீன நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து நடத்தும் வண்ணம் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கும் சாமி நிலங்களைத் தந்திருந்தார்கள். அவர்களில் ஒரு குடும்பத்துப் பையன் நன்கு படித்து முன்னேறினான். அவன் படிப்புக்குச் சாமியே உதவி செய்தார்கள். அந்தப் பையனுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் படிப்பிற்கு இடம் கிடைத்தது. எம்.பி.ஏ., படிப்பு என்பதாக நினைவு, அங்கே சென்று தங்கிப் படிக்கச் செலவு அதிகமாகும் என்ற நிலையில் ஆதீனமிளகி பார்வையில் இருந்த தென்னந்தோப்பை அந்தப் பையன் குடும்பத்திற்குத் தந்து தோப்பின் வருமானத்தைப் படிப்பிற்கும் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்துவிட்டார்கள். அந்தப் பையனை நான் அறிவேன். பெயர் இப்போது நினைவில் இல்லை. முதுகலைப் பட்டப்படிப்பை அவன் நல்லபடி முடித்து வந்தான்.

சாமி திட்டம் செய்து அவ்வாறு அமைத்தபிற்பாடு அவர்களிடம் இதுபற்றிப் பேசுவது சரியாக இருக்காது, அத்துடன் அந்தப் பையனின் கல்விக்காக சாமி உதவி செய்கிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும் என்று கூறி ஆதீனமிளகியைச் சமாதானம் செய்து அனுப்பி வைத்தேன்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே சாமி கொண்டிருந்த பரிவும் பாசமும் அளவிட முடியாது. அது பற்றிப் பல நிகழ்ச்சிகள் இருந்தாலும், எனக்கு நேரிடையாகத் தெரிந்த இந்த நிகழ்ச்சியைச் சொல்ல வேண்டும் என்ற ஆசையாலும், அதுவும் ஆதீனமிளகி சம்பந்தப்பட்டதாக இருப்பதாலும் இவ்விடத்தில் அதனைச் சொன்னேன்.

சாமி சொல்லியிருந்தவண்ணம் சரியாக நான்குமணிக்குப் பயணியர் விடுதிக்குச் சென்றுவிட்டேன். நான் சென்று சேர்ந்த அரைமணி நேரத்தில் சாமி அறையைவிட்டு வெளியேவந்தார்கள். காரில் ஏறி அமர்ந்து என்னையும் அமரச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்து சாமி தமது இறுதிக்காலம் வரை "அம்பாசிடர்" காரையே பயன்படுத்திவந்தார்கள். அந்தக் காரின் பின் இருக்கையில் சாமி பக்கத்தில் உட்கார்ந்து செல்வதற்கு எனக்குக் கூச்சமாகவே இருந்தது. புதுக்கோட்டையில் இருந்த காலத்தில் அறந்தாங்கியில் தங்கியிருந்த சாமியைப் பார்க்கச் சென்று, அவர்களிடம் விடைபெற்றுப் பேருந்து நிலையத்திற்கு நடந்து சென்ற என்னைப் பின்பு வந்த சாமி அப்போது காரில் ஏறச் சொல்லி நிலையத்தில் இறக்கிவிட்டுச் சென்றார்கள். அதுதான் அவர்களோடு முதன் முதலில் காரில் அமர்ந்து சென்ற நிகழ்ச்சி. அதற்குப் பின்பு இன்றுதான் இரண்டாவது தடவை அவர்களோடு அமர்ந்து செல்கிறேன். பின்னாளில் அது பழகிப்போனது. அவர்கட்கு முன்பு செருப்பணிந்து நிற்கமாட்டேன். காரில் பயணம் செய்யும் காலத்து முன் இருக்கைப்பகுதியில் அதனை விட்டுவைப்பேன்.

சாமி பரிபூரணம் ஆகும் காலம்வரை அவர்கள் கும்பகோணத்தில் தங்கியோ, கும்பகோணத்தைக் கடந்தோ செல்லும் காலத்தில் எனக்குத் தகவல் தந்து அவர்களைக் காணச் செல்லும் காலத்து, எங்களிடையே கருத்துப் பரிமாற்றங்கள், செய்திகள் சொல்லுதல் ஆகியவை சிலபோது காரிலேயே நடைபெறும். அவ்வாறு காரில் செல்லுதலுக்கு ஓர் எல்லையைச் சாமி வரையறை செய்திருந்தார்கள். கும்பகோணத்திலிருந்து கிழக்கே சாமி பயணம் செய்தால் மயிலாடுதுறை வரை அவர்களுடன் சென்று அங்கே இறங்கிக் கொண்டு பேருந்தில் குடந்தைக்குத் திரும்புவேன். மேற்கே பயணம் இருந்தால் பாபநாசம் வரை சென்றுவருவேன். செய்திகள் அதிகம் இருந்து நேரமும் இருந்தால் தஞ்சைவரை சென்று குடந்தைக்குத் திரும்புவேன்.

கார் பழையாறையைச் சென்று சேர்ந்தது. ஊரின் பெயரைச் சுட்டும் பலகையில் கீழப்பழையாறை என எழுதி இருந்ததைப் பார்த்தேன்.

கோயிலின் கோபுரவாசலுக்குச் சென்று சாமி இறங்கினார்கள். அங்கே ஏற்கெனவே இரண்டு கார்கள் நின்றன. அவற்றின் பக்கத்தில் பார்த்தாலே மதிக்கத்தக்க பெரியவர்கள் நான்கு பேர் நின்று கொண்டிருந்தனர். என் நண்பர் சுவாமிமலைத் திருக்கோயில் செயல் அலுவலர் திரு. இரா. அரங்கசாமியும் இருந்தார். கீழப்பழையாறை கோயில் சுவாமிமலை தேவஸ்தானத்தின் பார்வையில் இருக்கிறது என அவர் அப்போது சொல்லித் தெரிந்துகொண்டேன்.

அவர்கள் அனைவரும் சாமியை வரவேற்க, சாமி திருக்கோயில் கோபுரவாசலைக் கடந்து சென்றார்கள். கோபுரம் கட்டி முடிக்கப்படாமல் பாழடைந்து இருந்தது. கோயில் உள்ளே ஒரே நெருஞ்சி முள்காடு. புதர்ச் செடிகள், முட் செடிகள் மண்டிக்கிடந்தன. ஒற்றையடித் தடத்தில் நாங்கள் சென்று கோயிலின் மகாமண்டபத்தில் ஏறினோம். கையில் கொண்டுவந்திருந்த விரிப்பை இராமசாமி விரித்துப் போட வழிபாட்டை முடித்துக் கொண்டு சாமியுடன் எல்லாரும் அதில் வந்து அமர்ந்தனர். நான் ஓர் ஓரத்தில் உட்கார்ந்தேன்.

(தொடரும்)

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்

உழவர் குறை களைவோம்

(கவிஞர். வீ.செ. கந்தசாமி)

நூலறி புலவர் தேர்ந்த
நுண்கலை வாணர் எந்தக்
காலமும் ஆய்வு செய்யும்
கற்றறி வாளர் போற்றும்
சீலமும் அன்பும் கொண்டே
செந்நெறி நிற்போர் என்றும்
ஞாலமே புகழ்ந்து போற்றும்
நல்லறிவியல் ஆய்வாளர்

வல்லமை யுடனே நாட்டை
வகையுற அறிஞ ரோடு
பல்துறை அறிஞ ரோடு
பார்புகழ் சான்றோர்க் கெல்லாம்
அல்பகல் பாடு பட்டே
அழிபசிக் குணவ ளிக்கும்
நல்லவர் உழவர் என்றே
நாமெலாம் அறிவோம் நன்றே

இன்றவர் தமது வாழ்வில்
இயம்பிட வொண்ணாத் துன்பம்
தின்றிடத் தேய்ந்து போனார்
தேர்ந்திடும் வழியைக் காணார்
என்பதால் அவர்கள் உற்ற
இடர்களைக் களைந்து என்றும்
குன்றென நிமிரச் செய்வோம்
குறைகளைத் தீர்த்து வைப்போம்

அடுத்தவர்கள் எதனை வேண்டுமானாலும் கூறட்டும். உன் சுய உறுதியான முடிவில் நீ பிடிப்புடன் இரு. பின் நிச்சயம் மற்ற அனைத்தும் நடந்து முடிந்து உலகம் உன்னுடைய காலடியில் பணிந்து கிடக்கும்.

- சுவாமி விவேகானந்தர்

செஞ்சி வட்டம், நயம்பாடி
உலகத் திருக்குறள்பேரவை
திருவள்ளுவர் விழா, பொங்கல்விழா

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், நயம்பாடியில் திருவள்ளுவர் திடலில் உலகத் திருக்குறள் பேரவையின் 33ஆம் ஆண்டு ஐம்பெரும்விழா 14.1.2013 மாலை 6 மணியளவில் நிகழ்ந்தது.

இவ்விழாவிற்கு திரு. கி. சடகோபன் தலைமை வகித்தார். திரு. ஸ்ரீ லட்சுமி சேனபட்டராக பட்டாச்சாரிய வரிய சுவாமிகள் திருவள்ளுவர் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார். மாண்புமிகு நீதிபதி பா. ஜெயபாலன், பு. அறிவுடைநம்பி, குமாரி அறிவுடைநம்பி (ரூ. 50,000) அறக்கட்டளையைத் தொடங்கி வைத்துப் பாராட்டுரை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் திரு. கணேஷ்குமார் சிறப்புரையாற்றினார். முன்னாள் மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் விழாப்பேருரையாற்றினார்.

புலவர் திரு. ஆ. சந்திரசேகரன் எழுதிய "திருநாவுக்கரசர் தெய்வநெறி" என்ற ஆய்வு நூலை டாக்டர் கோ. அண்ணாமலை வெளியிட்டார். இந்த நூலை திரு. வி.பி. என்.கோபிநாத் பெற்றுக் கொண்டார்.

அடுத்து திருக்குறள் நெறிபரப்பும் திருக்குறள் தொண்டர் திருக்குறள் மா. வள்ளிமுத்து அவர்களுக்குப் பாராட்டுவிழா நிகழ்ந்தது. திரு. பா. அ. தமிழ்ச்செல்வன், திரு. வே. கண்ணன், திருமதி. இலட்சுமி சேகர், திருமதி. புலவர். வாசுகி, திரு. ஹாஜி அஹ்ரம், திரு. ச. இரவி ஆகியோர் பாரட்டுரை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் திரு. லோ. கோபால், திரு.கி. குமாரவேலு, திரு. பெ. கிருஷ்ணமூர்த்தி, திரு. ம. அரங்கநாதன், திரு. கோ. துரைராசன், திரு. மோ. மணிமேகலை, திரு. ப. வெங்கடேசன், திரு. இரா. திருவள்ளுவன் ஆகியோர் முன்னிலை வகித்து உரையாற்றினார்.

டாக்டர் அ. பாவேந்தன் M.D. நினைவு திருக்குறள் அறக்கட்டளையிலிருந்து (ரூ. 50,000,,- வங்கி வைப்பு நிதி ஆண்டு தோறும் திருக்குறள் போட்டிகளுக்கு அளிக்கப்படும் பரிசுகள் வழங்கப்பட்டன.

விழா நிறைவில் பள்ளிகளில் பயிலும் நயம்பாடி (ரெ) மாணவ, மாணவியர் அனைவருக்கும் நயம்பாடி நல்லாசிரியர் ஒருவர்

நினைவாக ரூ. 20/- மதிப்புள்ள திருக்குறள் புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

அடுத்து, பரிசளிப்பு விழா நடைபெற்றது. திருக்குறள் போட்டியில், வெற்றிபெற்றவர்களுக்கு டாக்டர். அ. சுகன்யா பாவேந்தன், திருப்பாவைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு.துரை. புண்ணியகோட்டி, விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. க. வச்சிரவேலு, திரு. க.குப்புசாமி ஆகியோரும், கலைநிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. ஜெ. குமரவேல், திரு.கி. இராசேந்திரன் ஆகியோரும் கோலப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திரு. ஜெ. விஜய், திரு.மா. சக்கரவர்த்தி ஆகியோரும் அழகுக் குழந்தைகள் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி. தமயந்திபாபுவும் பரிசுகளை வழங்கினர்.

2012 பள்ளிப் பொதுத்தேர்வில் வகுப்புவாரியாக மூவர்க்கு, திருமதி. குமாரிஅறிவுடைநம்பி பரிசுகள் வழங்கினார்.

நன்றியுரை, நாட்டு வாழ்த்துடன் விழா இனிதே நிறைவெய்தியது.

தூத்துக்குடியில் திருக்குறள் கட்டுரைப்போட்டி நடைபெற்றது

உலகத் திருக்குறள் பேரவை (தலைமையிடம் குன்றக்குடி)யின் தூத்துக்குடி மாவட்டக் கிளையின் சார்பில் மாவட்ட அளவில் கல்லூரி மாணவ மாணவர்களுக்கான திருக்குறள் கட்டுரைப்போட்டி தூத்துக்குடி கீழரெங்கநாதபுரம் சி.எம்.மேல்நிலைப்பள்ளியில் உலகத்திருக்குறள் பேரவை மாவட்டச் செயலாலர் "திருக்குறள்" மோ.அன்பழகன் தலைமையில் ஆனந்தராசு தனபாலன் தங்கமாரியப்பன் முன்னிலையில் நடைபெற்றது. போட்டிக்கு ஆசிரியர் தேவிகா நடுவராகப் பணியாற்றினார்.


தூத்துக்குடி மரியன்னை மகளிர் கல்லூரி, திருச்செந்தூர் கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி, தூத்துக்குடி ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி தோமையார் கல்வியியல் கல்லூரி மாணவிகள் கலந்துகொண்டனர்.

தகுதியான கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு சனவரித் திங்களில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களால் பரிசுத்தொகையும் சான்றிதழும் வழங்கப்பட இருக்கிறது.

பாரதி விழா

கருத்தரங்கம்

நெல்லை மாவட்ட உலகத்திருக்குறள் பேரவைசார்பில் 25.12.12 அன்று பாளையங்கோட்டை மாநிலத் தமிழ்ச்சங்கத்தில் பாரதி விழா கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு முனைவர்.ச. கண்ணபிரான் தலைமை வகித்தார். பேரவைச் செயலாளர் பாவலர் த.மு.சா. காசாமைதீன் வரவேற்புரையாற்றினார். உ.சிதம்பரபாண்டியன் வாழ்த்துரை வழங்கினார். முன்னாள் மாவட்டக் கல்வி அலுவலரும் பேரவைத் தலைவருமான அ.இராசகிளி பாரதியின் நாட்டுப்பற்று என்றதலைப்பிலும், சதக்கத்துல்லா அப்பா கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர்.ச. மகாதேவன் பாரதியின் மொழிப்பற்று என்ற தலைப்பிலும், கவிஞர் சி. இராசா முகம்மது பாரதியின் இறைப்பற்று என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்கினர். திருக்குறள் இரா. முருகன் நன்றி கூறினார். விழாவில் இளம்பாரதியாக காட்சியளித்த பள்ளி மாணவி விண்மதி வசுந்தராவுக்கு பேரவைச் செயலாளர் பாவலர்.த.மு.சா. காசாமைதீன் நினைவுப்பரிசு வழங்கினார். விழாவில் செ.திவான், பொறியாளர் பாக்கியசாமி, வழக்கறிஞர் பாண்டியன், முன்னாள் கல்வி அலுவலர் கோமதிநாயகம், பேராசிரியர் தி. முகுந்தன் பேராசிரியர் ரொட்டேரியன் என்.எஸ். சங்கரன் மற்றும் பேரவை உறுப்பினர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



பாரதி விழாவில் இளம்பாரதியாக காட்சியளித்த பள்ளி மாணவி விண்மதி வசுந்தராவுக்கு பேரவைச் செயலாளர் பாவலர்.த.மு.சா. காசாமைதீன் நினைவுப்பரிசு வழங்குகிறார்.

வான் குறள் ஓதுக!

(புலவர். மு. இராமலிங்கம்)

பன்னூல் உலகில் உண்டு
பாரில் நீயும் அறிவாய்
அந்நூல் தன்னில் எல்லாம்
அழகா யமைந்த ஓர்நூல்
நன்னூல் அதுவே நாடு
நானிலம் உனையே போற்ற
பொன்னூல் என்ற "குறளாம்"
போற்றி நாளும் கற்பாய்.

(வேறு)

முப்பால் என்று சொல்வார்கள்
முத்தமிழ் நாட்டு மக்களுமே
ஒப்பே இல்லா "தமிழ்மறை"யை
"உத்தரவேதம்" என்பார்கள்
"பொய்யா மொழி"யைப் "பொதுமறை"யை
போற்றித் "தெய்வ நூலெ"ன்பார்
வையம் வாழ வள்ளுவனார்
வான் குறள்ஒன்றே ஓதிடுவாய்

கற்கும் நெஞ்சம் திருந்திடவும்
கற்பனை ஊற்றுப் பெருகிடவும்
நற்பேர் உலகில் வாங்கிடவும்
நல்லவர் என்று நாடிடவும்
சொற்பிழை இன்றிப் பேசிடவும்
சொந்த மொழியைக் காத்திடவும்
பற்பல அறிவு வளர்ந்திடவும்
பைந்தமிழ்க் "குறளை" ஓதிடுவாய்

வேலைக்காரனாக இருக்க முதலில் கற்றுக் கொள்ளுங்கள். அப்போதுதான் எஜமானனாகும் தகுதி தானே வந்து சேரும்.

- சுவாமி விவேகானந்தர்

மனிதனாக........ தெய்வமாக

(இசையறிஞர். நெல்லை. ஆ. சுப்பிரமணியன்)

விவசாயிகள் தானியத்தில் உள்ள குப்பைகளைச் சுத்தம் செய்யும் முறைக்கு, "தூற்றுதல்" என்று பெயர். இப்படி காற்றுள்ளபோதே குப்பைகளை நீக்குவதே, "காற்றுள்ளபோதே தூற்று" என்கிற பழமொழியின் நுட்பமான பொருள் வேறு.

இதன் நுட்பமான பொருள் வேறு. நமது மூச்சுக்காற்று உள்ளபோதுதான் நம்தவறுகளை உணர்ந்து திருத்திக்கொள்ள முடியும். ஆம்... "உயிரோடு இருக்கும்போதே உன் தவறுகளைத் திருத்திக் கொள் என்பதுதான், காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்" என்ற பழமொழியின் ஆழ்பொருள். இறையருள்மிகு குன்றக்குடி அடிகளார் அன்று சொன்ன விளக்கம் இது!

மனிதனுக்குள் இருக்கும் விலங்கை தண்டிக்கத்தான் சட்டத்திற்குத் தெரியுமே ஒழிய, அவனை தெய்வமாக்க சமயத்தால் மட்டுமே முடியும். "நீ விலங்கு அல்ல, ஏன் மனிதனும் அல்ல... தெய்வம்!" "விட்டுக்கொடு - பிறரை வாழவை" என்று சட்டத்தையும் தாண்டி, மனிதனை உயர்த்தும் மகத்தான பணி சமயத்தின் பணி! அதனால்தான் சட்டத்தைக் கையில் வைத்திருக்கும் அரசர்கள், சமயத்தைக் கையில் வைத்திருக்கும் துறவிகளை வணங்கினார்கள்.

"கடந்தும் உள்ளும் இருப்பதே கடவுள்! ஆகாசமே கடவுள். நம்மை மண்ணாய் - நீராய் - நெருப்பாய் - காற்றாய் உணரும்நிலை கடந்து ஆகாசமாய் உணரும்போது, நாம் கடவுளாகிறோம். இதுவே மனிதன் கடவுளாகும் உச்சநிலை!"

புருவ மத்தியில் நெற்றிக்கண் திறந்த உடனேயே நாம் மனித வடிவில் தெய்வமாகிறோம். நமது ஆறு ஆதாரங்களும் மலர்ந்த அந்த நிலையே சுப்ரமண்ய தத்துவம். முருகன் ஆறுமுகங்களோடு இருப்பதாகச் சொல்கிறது புராணம். நமது உயிர் ஆற்றல், "மூலாதாரம் - சுவாதிஷ்டானம் - மணிபூரகம் அநாகதம் - விசுக்தி - ஆக்ஞை" என்று விநாயகர் அகவல் விளக்குகிறது.

எல்லா உயிர்களிலும் உயிராக உறையும் இறையாற்றலை போற்றி வணங்குவோம்.

- சொல்வேந்தர் சுகி.சிவம் எழுதிய மனிதனும் தெய்வமாகலாம் நூலிலிருந்து.

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி
பரிமள விலாஸ்

S.சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி - 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

Phone: 04577 - 264567 Mobile : 94433 64200

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இயக்குநர்

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி, 2. அழகுக்கலை, 3.லெதர் & ரெக்ஸின் பொருட்கள் தயாரித்தல், 4. பற்றவைப்பு (ஆர்க் & கேஸ் வெல்டிங்), 5.செல்போன் பழுது நீக்குதல், 6. T.V, Radio- பழுது நீக்குதல், 7. எம்ப்ராய்டரி 8. பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், 9.வீட்டு வயரிங் வேலை செய்தல், 10. இரண்டு சக்கர வாகனம்பழுது நீக்குதல், 11. ஆபரண நகை தயாரித்தல், 12. திரை அச்சு வேலை, 13. சேலை டிசைனிங், 14. கைவினைப் பொருட்கள் தயாரித்தல், 15.பொம்மைகள் தயாரித்தல், 16. காகித உறை மற்றும் பைகள் தயாரித்தல், 17. வீட்டு உபயோகப்பொருட்கள் பழுது நீக்குதல், 18. உணவுப் பொருட்கள் தயாரித்தல், 19. பேப்ரிக் பெயிண்டிங், 20. சாக்பீஸ், மெழுகுவர்த்தி, பினாயில், சாம்பிராணி தயாரித்தல் 21. கயிறு திரித்தல், 22. GFRB பொருட்கள் தயாரிப்பு, 23. சேலை புதுப்பித்தல் சுருக்கம் நீக்குதல், 24. எலக்ட்ரானிக் சோக் தயாரித்தல், 25. கூடை முடைதல், 26.உல்லன் நிட்டிங் 27. நாப்கின் தயாரித்தல், 28. தையல் இயந்திரம் பழுது நீக்குதல், 29. போட்டோ லேமினேசன், 30. ஐஸ்கிரீம் தயாரித்தல் 31. காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல்,

தகுதி : *தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.*

பயிற்சி நேரம் : *பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.*

குறிப்பு : *ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.*

MAKKAL CHINTHANAI - January 2013 Price Rs. 8-00
Date of Publication 21-01-2013
Register of News Paper for India No. 85913/81 Register No. KKD/04/2012-2014



பெறுநர்

திரு ______________________________

அவர்கள்

____

____

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166